**கவனிக்க.-** 2007.12.14 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1529 - 2007 දෙසැම්බර් 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2007.12.20

1529 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 1194 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1197 |
| விலைக்கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | 1198 |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1224 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, திசெம்பர் 28 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, திசெம்பர் 14 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2007 இன் இல. 509

டீஆர்எவ்/ஆர்ஈசீரீ/580(iv) ஏவை.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்த்துதல், மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரின் பதவி உயர்த்துதல்/ மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

(அ) கப்ரின் விக்கிரமசிங்க முதியன்சேலாகே கிறிஷாந்த சந்திக்க ஜயநாத் மிநிரெ-

(1) 2005, யூன் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவிக்கு பவியுயர்த்துதல்,

(2) 2006, ஓகத்து மாதம் 12 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் லெப்டினன்ட் கர்னல் பதவிக்கு பதவியுயர்த்துதல்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, செத்தெம்பர் 8.

12-461

---

2007 இன் இல. 510

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2475.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

### இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) குறுப்பு முதியன்சேலாகே நிமல் சோமசிரி இகாப (உ/62645)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, மாச்சு 28.

12-456

---

2007 இன் இல. 511

டீவீஎவ்/ஆர்ஈசீரீ/264 ஏவை.

## இலங்கை தரைப்படை - தொண்டர் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதியிலிருந்து மேஜர் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) (பொதுக் கடமைகள்) பதவிக்கு மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) (பொதுக் கடமைகள்) ரத்நாயக்க முதியன்சேலாகே சுபசிங்க இதேபாபஅ (உ/5126)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, சனவரி 9.

12-598

இலக்கம் : டீஎவ்/ஆர்ஈசீரீ/260.

## இலங்கை தரைப்படை - தொண்டர் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அபகீர்த்தியாக அகற்றுதல்

### அபகீர்த்தியாக அகற்றுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2005, யூலை மாதம் 20 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் இலங்கை தரைப்படையின் தொண்டர் படையிலிருந்து அபகீர்த்தியாக அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் சியாமன் வசந்தகுமார விஜேதுங்க கரெ (உ/2945)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, மாச்சு 5.

12-462/1

---

டீஎவ்/ஆர்ஈசீரீ/9 ஏவை (I).

## இலங்கை தரைப்படை - தொண்டர் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, செத்தெம்பர் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் அம்பலந்தூவ கன்கானம்கே சாந்தனீ இஇபீப - (உ/5632)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, மாச்சு 5.

12-459/1

---

2007 இன் இல. 512

டீஎவ்/ஆர்ஈசீரீ/215 ஏவை (2).

## இலங்கை தரைப்படை - தொண்டர் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, மாச்சு மாதம் 1 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் ஜெரம் அர்னஸ்ட் பர்னதெத் கெலாட் இகப (உ/2583)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, சனவரி 31

12-597

---

2007 இன் இல. 513

டீஎவ்/ஆர்ஈசீரீ/143 (V) ஏவை.

## இலங்கை தரைப்படை - தொண்டர் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர் உப சேவைக்கு மாற்றம் செய்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் தொண்டர் படையின் உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் கல்பொத்தகே மஹிந்ததாச பெரேரா இதேபாபஅ (உ/5149)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, மாச்சு 5.

12-458

2007 இன் இல. 514

டீவீஎவ்/ஆர்ஈசீரீ/9 ஏவை (1).

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, சனவரி மாதம் 15 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் தொண்டர் படையின் அதிகாரவாணையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் கோணார முதியன்சேலாகே சதானா சஞ்ஜீவனீ கோணார இஇபீப - (உ/5527)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, மாச்சு 5.

12-459/2

---

2007 இன் இல. 515

டீவீஎவ்/ஆர்ஈசீரீ/9 ஏவை (1).

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, சனவரி மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் தொண்டர் படையின் அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் வீரசூரிய முதியன்சேலாகே முதித்தா குசும் வீரசூரிய, இஇபீப - (உ/5535)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, மாச்சு 5.

12-459/3

---

2007 இன் இல. 516

டீவீஎவ்/ஆர்ஈசீரீ/162 (II).

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, மாச்சு மாதம் 1 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) (பொது கடமைகள்) தேசிங்க பத்திரகே தயானன்த ஹேமசிரி இஇபொதுசேப (உ/5991)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, மாச்சு 5.

12-454

---

2007 இன் இல. 517

டீவீஎவ்/ஆர்ஈசீரீ/260.

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, மாச்சு மாதம் 1 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) (பொதுக் கடமைகள்) வன்னிஹாமிகே கருணாரத்ன கரெ (உ/5988)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, மாச்சு 5.

12-462/2

---

2007 இன் இல. 518

டீவீஎவ்/ஆர்ஈசீரீ/22 (1).

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, மாச்சு மாதம் 1 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் தொண்டர் படையிலிருந்து

இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் ராஜபக்ஷ முதியன்சேலாகே குடாபண்டா இசிரெ (உ/5140)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, மார்ச்சு 5.

12-457

---

2007 இன் இல. 519

டீவீஎவ்/ஆர்ஈசீரீ/262 (III) ஏவை.

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007,ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகததியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் கோனியா மாலிகமகே லக்ஷ்மன் அபோன்சு இஇபீப (உ/4780)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, மார்ச்சு 5.

12-455

---

2007 இன் இல. 520

டீவீஎவ்/ஆர்ஈசீரீ/54/ஏவை.

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும், உள்ளடக்குதலும்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகததியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையின் லெப்டினன்ட் பதவியிலிருந்து அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும், அன்றிலிருந்து இலங்கை ரைபல் படையணியிடம் உள்ளடக்குதலும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கெடெற் உத்தியோகத்தர் வீரசிங்க முதியன்சேலாகே உபுல் நிஷாந்த வீரசிங்க - (சீ/31822)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, ஒற்றோபர் 18.

12-460

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

34 (2) (அ) பிரிவின் கீழான அறிவித்தல்

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டமூலத்தின் 34 (2) (அ) பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய, பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் ஆகிய நான், கீழ் குறிப்பிடும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள "பமுனு ஆராச்சி மன்றத்தின் ஹோமாகம தள வைத்தியசாலை கட்டிட நிர்மாணிப்பு நிதி". அப்பிரிவின் நோக்கங்களுக்காக அனுமதிக்கப்பட்ட அறக்கொடை நிறுவனமாக இத்தால் அறிவிக்கின்றேன்.

ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய,
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் .

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 1,
2007, நவெம்பர் 29.

**அட்டவணை**

"பமுனு ஆராச்சி மன்றத்தின் ஹோமாகம தள வைத்தியசாலை கட்டிட நிர்மாணிப்பு நிதி".

12-423

# வரவு செலவுத் திரட்டுக்கள்

## பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2005, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்குகள் மீது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2005, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்குகள் மீதான கணக்காய்வானது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகள் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (1) மற்றும் 111 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. இவ்வறிக்கை பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவு மற்றும் நிதியதிகாரச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்படுகின்றது.

1.2 ***கணக்காய்வின் நோக்கெல்லை.***- இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்ற பதவியினர் ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், முறைகள், நடைமுறைகள் என்பவற்றிற்கமைய மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் ஆதாரப்படுத்தத்தக்க சான்றுகளைப் பரிசீலித்தல், நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலில் மேற்கொண்ட தத்துவங்கள், குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள், தீர்மானங்கள் போன்றவற்றை மதிப்பாய்வு செய்தல், அவற்றின் ஒட்டுமொத்தமான முன்வைத்தலை மதிப்பாய்வு செய்தல், கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றியும் பிரயோகிக்கப்பட்டு போதியளவு வெளிப்படுத்தப்பட்டும் உள்ளதனை நிர்ணயித்தல் என்பவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

2. ***கணக்குகள் :***

2.1 ***கணக்காய்வு அபிப்பிராயம்.***- எனது அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறான விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் நிதிக் கூற்றுக்களில் (குறிப்பு இல. ஏ முதல் எவ் வரை) வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் அதன் மூலம் 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளிலும் காசுப்பாய்ச்சலினதும் உண்மையானதும் நேர்மையானதுமான தோற்றம் புலப்படுகின்றது என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

2.2 ***கணக்குகள் மீதான கருத்துரைகள் :***

2.2.1 *கணக்கீட்டுக் கொள்கைகள்.*- பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன :-

(அ) இருப்புக்களின் மீதி இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளின் அடிப்படையில் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பல்கலைக்கழகத்திற்குரிய 120 திணைக்களங்களில் 2005 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.2 *கணக்கீட்டுக் குறைபாடுகள்.*- பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன :

(அ) விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் மற்றும் கமநல அறிவியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்காக பல்கலைக்கழகத்தால் மீளாய்வாண்டின்போது, செலவிடப்பட்டிருந்த பாதுகாப்புச் செலவினம் பெறவேண்டிய தொகையாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிராததுடன் அந்நிறுவகங்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வேறு நிதியங்களின்கீழ் கணக்கிடப்பட்டிருந்த எட்டு செயற்திட்டங்களின் வருமானத்திற்கு மேலதிகமாக செலவிடப்பட்டமையால் ஏற்பட்ட ரூபா 18,74,566 கூட்டுத் தொகையான பற்றாக்குறை, அத்தகைய செயற்திட்டங்களின் மிகையுடன் சீராக்கப்பட்டமையால், ஏனைய நிதியங்களின்கீழ் காண்பிக்கப்பட்டிருந்த தேறிய பற்றாக்குறை அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) உடன்படிக்கை மீறப்பட்டிருந்த 13 விரிவுரையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,339,205 கணக்கிடப்பட்டிராததுடன் ரூபா 1,22,790 ஆன மீதி இரு தடவை கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) 2004, திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 98,126,579 ஆன அதேவேளை இது 2005, சனவரி 1 இல் உள்ளவாறு ரூபா 103,094,208 ஆக முன்கொண்டுவரப்பட்ட காரணத்தினால் கணக்குகளில் ரூபா 4,967,629 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இனங்காணப்பட்ட ரூபா 76,597 ஆன ஐந்து ஊழியர் கடன் மீதிகள் 2005, சனவரி 1 இல் உள்ளவாறு கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(உ) 2003 ஆம் ஆண்டின்போது இரு சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 4,000 கணக்குகளில் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஊ) அன்பளிப்பாகப் பெறப்பட்ட ஓர் வாகனத்தை இறக்குமதி செய்வதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 1,421,982 வாகனப் பழுதுபார்த்தல் செலவினத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(எ) ஒப்பந்தத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 30,000,000 முற்பணம் தீர்க்கப்பட்டிராததுடன், நிலுவையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஏ) 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறு நூலகங்களிற்குப் பெறப்பட்டிருந்த ரூபா 1,378,930 ஆன வெளிநாட்டு வார வெளியீடுகளின் பெறுமதி மூலதனமாக்கப்படாது, வழியில் உள்ள இருப்பாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) வழியில் உள்ள இருப்பாகக் கணக்கிடப்பட்டிருந்த ரூபா 179,178 ஆன பொருட்கள், காணாமற் போயிருந்த போதிலும் கணக்குகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2002 ஆம் ஆண்டின்போது உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 823,237 உம் 2004 ஆம் ஆண்டின்போது வாகனக் கொள்வனவிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 2,000,000 உம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையாக நிலுவையாக கணக்குகளில் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறும் சரியாக மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பல் வைத்திய பீடத்திற்கு அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த 189 விடயங்களின் கீழான 1853 அலகுகள் பெறுமதி கணக்கிடப்பட்டு, இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) பல் வைத்திய பீடத்தின் பயிற்சிப் பாடநெறிக்கு உரிய 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13,958 ஆன இறுதி ஆவண இருப்புப் பெறுமதி இருமுறை கணிக்கப்பட்டதன் காரணமாக இருப்புப் பெறுமதி ரூபா 13,958 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) தீர்க்கப்பட்டிராத ரூபா 77,585 மீதியும் இரத்துச் செய்யப்பட்ட ரூபா 3,232 மீதியும் வழங்கல் முற்பண மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் அக்கணக்குகளின் மீதி ரூபா 80,817 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) 2006 ஆம் ஆண்டிற்காக 2005 ஆம் ஆண்டின்போது வார வெளியீடுகளுக்காகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 224,090 வழிப்போக்கில் உள்ள இருப்பாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

2.2.3 *இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்.*- பின்வரும் இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அவதானிக்கப்பட்டன :-

(அ) கணக்குகளில் காண்பிக்கப்படும் வெளிவாரிப் பரீட்சைப் பிரிவிற்குச் செலுத்தப்படவேண்டிய காசு மீதிக்கும் நிதிக் கூற்றுக்களின் இணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வெளிவாரிப் பரீட்சைப் பிரிவுக் கணக்குகளில் காண்பிக்கப்படும் அப்பிரிவிற்குப் பெறப்படவேண்டிய மீதிக்குமிடையில் ரூபா 9,191,915 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்குகளில் காண்பிக்கப்படும் 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் கடன் மீதி ரூபா 93,137,887 ஆனபோதிலும், ஊழியர் கடன் பதிவேட்டில் காண்பிக்கப்படும் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 94,568,430 ஆனமையால் ரூபா 1,430,543 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த வைப்புக் கணக்கு மீதி, வைப்புப் பேரேட்டு மீதியுடன் இணக்கம் செய்யப்படுகையில் ரூபா 931,025 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) உப பதிவேடு பீ 11 இன் பிரகாரம் மூலதனமாக்கப்பட்ட பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் ரூபா 21,274,878 பெறுமதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைப்பெறுமதியும் உள்ளக்கப்பட்டிருந்தது.

(உ) சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம், நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைக்கணக்கு மீதி ரூபா 21,002,862 ஆன அதேவேளை விபரமான உப பதிவேட்டில் இது ரூபா 21,274,879 ஆனமையால் ரூபா 272,017 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

2.2.4 *பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்.*- பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன :-

(அ) வேறு நிதிய மீதியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 4,363,408 ஆன 58 மீதிகள் 2 ஆண்டு முதல் 7 ஆண்டு காலம் வரையான காலப்பகுதியில் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 3,264,155 ஆன 84 பதவியணியின் கடன் மீதிகள் ஆண்டு 1 முதல் ஆண்டு 10 வரையான காலப்பகுதியில் விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) கூட்டுத் தொகை ரூபா 1,312,387 ஆன உள்நாட்டு வழங்கல் முற்பண மீதியில் 4 ஆண்டு காலம் பழைமை வாய்ந்த ரூபா 2342,405 ஆன 26 மீதிகளும் 2 ஆண்டு காலம் பழைமை வாய்ந்த ரூபா 245,986 ஆன 30 மீதிகளும் நிலவிய போதிலும், அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளூர் வழங்கல், ஆராய்ச்சி மற்றும் நிதியம் மற்றும் செலவினத் தலைப்பிடப்பட்ட சேவைகளுக்காக 1989 முதல் 2004 ஆம் ஆண்டு வரை பெறப்பட்டிருந்த முறையே ரூபா 1,312,386 உம் ரூபா 1,916,736 உம் ரூபா 2,251,603 மான முற்பணங்கள் 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தீர்க்கப்படாதிருந்தன.

(உ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதிவேட்டின் பிரகாரம் 1988 முதல் 2005 வரையான காலப்பகுதியின்போது உடன்படிக்கையை மீறிய 155 விரிவுரையாளர்களிடம் இருந்து ரூபா 90,157,789 அறவிடப்பட வேண்டிய போதிலும், அத்தொகை அறவிடப்படுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல்வேறு கடன் கொடுநரின்கீழ் செலுத்தப்படாத சம்பளமாக கணக்குகளிற்கு உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 3,421,871 இல் வெளிநாட்டிற்குச் சென்று உடன்படிக்கை மீறப்பட்ட, சேவையில் இருந்து கேட்டு விலகிய, சேவையை விட்டு விலகிச் சென்ற உத்தியோகத்தர்களின் சம்பளம் இருந்தபோதிலும், அம்மீதிகளைத் தீர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலை.

(எ) 6 வங்கிக் கணக்குகளுக்குரிய 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தேறப்பட்டிராத ரூபா 880,548 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 *கணக்காய்விற்கான சான்றுகளின்மை.*- கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,071,176 கூட்டுத் தொகையான பதவியினர் கடன், ரூபா 91,253 கூட்டுத்தொகையான முற்பணம், ரூபா 524,002 கூட்டுத்தொகையான வைப்புகள் மற்றும் ரூபா 3,421,871 ஆன செலுத்தப்படாத சம்பளங்கள் என்பன தொடர்பாக உப பதிவேடுகள், காலப்பகுப்பாய்வு, விபரப் பட்டோலைகள் இன்மையால் அவற்றைக் கணக்காய்வின்போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

2.2.6 *சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை :*

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களின் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும் :-

| *சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு* | *இணங்காமைகள்* |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டம்- 11 ஆம் பிரிவு | முதலீடு செய்யப்பட்டிருந்த மூபா 19,000,000 மற்றும் மீளப் பெறப்பட்டிருந்த ரூபா 9,830,650 இற்காக உரிய அமைச்சரின் அங்கீகாரத்துடன் நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 99 (1) ஆம் பிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) உப பிரிவுகள் | பெறப்படும் சகல நிதிகளும் "பல்கலைக்கழக நிதியம்" என இனங்காணப்படும் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், பல்கலைக்கழகத்திற்குப் பெறப்பட்டிருந்த ரூபா 189,523,989 ஆனது அந்நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 131 ஆம் பிரிவு | பொறியியல் பீடத்தின் நிலையான கொடுப்பனவுகளிலிருந்து பிடித்து வைத்தல் வரியாக ரூபா 36,884 கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) நிதிப் பிரமாணம் 71 மற்றும் 2003, யூன் 2 மற்றும் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 9.10 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக பொறியியல் நிர்மாண மற்றும் திட்டமிடற் பிரிவிற்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த பொறியியல் விரிவுரையாளர் ஒருவருக்கு 2005 சனவரி முதல் செத்தெம்பர் வரை ஊதியமாக ரூபா 405,000 செலுத்தப்பட்டிருந்தது. |

| *சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு* | *இணங்காமைகள்* |
|---|---|
| (உ) நிதிப் பிரமாணம் 371 (பீ) | ஒரே தடவையில் வழங்கப்படக்கூடிய முற்பணம் ரூபா 20,000 ஆன போதிலும் ரூபா 24,150 முதல் ரூபா 269,290 வரையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப் பட்டன. |
| (ஊ) நிதிப் பிரமாணம் 396 (டீ) | வழங்கப்பட்டு 6 மாத காலாவதியாகிய ரூபா 1,557,019 ஆன 106 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (எ) நிதிப் பிரமாணம் 770 மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன விதிக் கோவை xxvi ஆம் அத்தியாயம் 4 ஆம் பந்தி | (i) பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சிபாரிசு செய்யப்பட்டவாறு ரூபா 365,822 கிரயமான 161 விடயங்களும் கிரயம் கணிப்பிடப்பட்டிராத 1,891 விடயங்களும் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) பொறியியல் பீடத்தின் இருப்புக் களஞ்சியத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 26,418 பெறுமதியான பொருட்கள் தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. |
| (ஏ) நிதிப்பிரமாணம் 770 மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தாபன விதிக்கோவை யின் xxvi ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பந்தி | பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், 965 விடயங்கள் பற்றாக்குறையாகவும் 3 பிரிவுகளிற்குரிய 57 விடயங்கள் மேலதிக மாகவும் இருந்தமை தொடர்பாக எதிர்கால நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஐ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தாபன விதிக்கோவையின் iii ஆம் அத்தியாயத்தின் 23.3.1, 23.3.3 மற்றும் 23.3.6 ஆம் பந்திகள் | ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் பல்கலைக்கழகத்தின் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கு பதிற் கடமையாற்றும் நியமனம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஒ) பல்கலைக்கழக மானியங்கள் குழு மற்றும் உயர் கல்வி நிறுவகத்திற்கான தாபன விதிக்கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பந்தி | பல் மருத்துவ பீடத்தின் பயிற்சிப் பாடநெறி நடாத்துவதற்காக உத்தி யோகத்தர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் உரிய அங்கீகாரம் இன்றி ரூபா 172,750 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஓ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் தாபன விதிக்கோவையின் xxvi ஆம் அத்தியாயம் 2.8 ஆம் பிரிவு | பீடங்களிலும் திணைக்களங்களிலும் உள்ள பொருட் பதிவுப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாது அலுவலகங்களில் உள்ள பொருட் பதிவுப் பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருந்தது. |
| (ஔ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் தாபன விதிக்கோவை xxvii ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | 1998 ஆம் ஆண்டின்போது யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவ கத்தின் உதவியாகப் பெறப்பட்ட 4 டிராக்டர்களும் ஒரு டிரெயில ரும் 2005, செத்தெம்பர் வரையிலும் பதிவுசெய்யப்படாதிருந்தன. |
| (ஃ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் தாபன விதிக்கோவை xxvii ஆம் அத்தி யாயத்தின் 8 ஆம் பிரிவு | எரிபொருள் பயன்படுத்தப்படும் அளவு தொடர்பான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு, இதன் பிரகாரம், ஓட்ட அட்டவணை கள் பேணப்பட்டிருக்கவில்லை. |

2.2.7 *போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்பட்டிராத கொடுக்கல் வாங்கல்கள் :*

(அ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச் சட்டம் மற்றும் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி கல்விசார் படிப்பணம் மற்றும் வேலைப்பழு நீக்கற் படிப்பயணம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 1998 ஆம், 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியின்போது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட அத்தகைய மேலதிகக் கொடுப்பனவுகள் முறையே ரூபா 94,254,636 உம் ரூபா 18,850,924 உம் ஆகும்.

(ஆ) 1994, யூன் 14 இன் 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக மொழித் திறன்படி பணமாக 1994 முதல் 2005 வரையான காலப்பகுதியின் போது ரூபா 18,794,673 கூட்டுத்தொகையான தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழக நிதி நிறைவேற்று குழுச் சபையின் தீர்மானத்தின்படி, தொலைபேசிப் பட்டியலுக்காக அரசாங்க செலவில் செலுத்தப்படக்கூடிய ஆகக்கூடிய எல்லை மீறப்பட்டு 2005, சனவரி முதல் செத்தெம்பர் வரை 10 தொலைபேசிகளுக்காக ரூபா 424,314 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) பல்கலைக்கழக நிதி நிறைவேற்றுக் குழு அங்கீகாரம் பெறப்படாது பதிவுசெய்யத் தாமதித்த காரணத்திற்காக ஒரு மாணவனிடம் இருந்து ரூபா 200 உம். பாடங்கள் மாற்றப்படுவதற்காக ரூபா 500 உம், அறிவியல் பீடத்தின் பீடாதிபதி சுயவிருப்பில் 41 மாணவர்களிடம் இருந்து ரூபா 10,000 ஆன தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்தது. இப்பண அறவீடு குறித்து நிதிப்பிரமாணம் 184 இன் பிரகாரம் பற்றுச்சீட்டு ஒன்று வழங்கப்பட்டிராததுடன், 2005, திசெம்பர் 16 இல் உள்ளவாறும், நிதிப்பிரமாணம் 185 இன் பிரகாரம் அப்பணம் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

3. **நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு :**

3.1 ***நிதிசார் விளைவுகள்.***- மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவு, மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டதன் பின்னர் ரூபா 521,875,858 ஆன ஓர் பற்றாக்குறையான அதேவேளை இது முன்னைய ஆண்டிற்கான ரூபா 429,971,231 ஆன ஓர் பற்றாக்குறையுடன் ஒப்பிடப்பட்டதாகும். இதன்படி மீளாய்வாண்டில் நிதிசார் விளைவுகளில் ரூபா 91,904,627 ஆன ஓர் தேறிய வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. பதவியினர் வேதனம், பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடுகளிலான அதிகரிப்பும் பராமரிப்பும் ஒப்பந்த அடிப்படையிலான சேவைகள், ஏனைய செயன்முறை என்பன இவ்வீழ்ச்சிக்காக பங்களித்த பிரதான காரணிகளாகும்.

3.2 ***செயற்பாடு.***- பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன :-

(அ) வெளிவாரிப் பரீட்சைப் பிரிவின் 2000 முதல் 2004 வரையான காலப்பகுதியின்போது நடாத்தப்பட வேண்டிய 6 பட்டப்படிப்பு பரீட்சைகள் 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. 2000 முதல் 2004 வரையான காலப்பகுதியின்போது நடாத்தப்பட்ட 10 பட்டப்பாட நெறிகளின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 234 நாட்கள் முதல் 575 நாட்கள் வரையான நீண்ட காலதாமதம் நிலவியது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின்படி 4 கல்வி ஆண்டுகளிற்கான இறுதியாண்டுப் பரீட்சைகளுக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையும், சித்தியெய்திய மாணவர்களின் எண்ணிக்கையும், குறை சித்தி பெற்ற மற்றும் சித்தியெய்தாத மாணவர்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு பீடத்திலும் பரீட்சைகளுக்குத் தோற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கையின் சதவீதமாகக் கீழே தரப்பட்டுள்ளது :

| பீடம் | ஆண்டு | தோற்றியவர்களின் எண்ணிக்கை | சித்தியெய்தியவர்களின் எண்ணிக்கை | குறை சித்தி அல்லது சித்தியெய்தாதவர்களின் எண்ணிக்கை | தோற்றிய எண்ணிக்கையின் நூற்று வீதமாக சித்தியெய்தியோர் எண்ணிக்கை | தோற்றிய எண்ணிக்கையின் நூற்று வீதமாக சித்தியெய்தாத/ குறை சித்தியெய்தியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| கலை | 2002 | பொது 241 | 201 | 40 | 83.4 | 16.6 |
| | | விசேட 325 | 323 | 02 | 99.4 | 0.6 |
| | 2003 | பொது 206 | 156 | 50 | 75.7 | 24.3 |
| | | விசேட 354 | 350 | 04 | 98.9 | 1.1 |
| | 2004 | பொது 226 | 207 | 19 | 91.6 | 8.4 |
| | | விசேட 441 | 422 | 19 | 95.7 | 4.3 |
| | 2005 | பொது 187 | 149 | 38 | 79.7 | 20.32 |
| | | விசேட 370 | 362 | 08 | 97.8 | 2.2 |
| மருத்துவம் | 2002 | 233 | 172 | 61 | 73.8 | 26.2 |
| | 2003 | 400 | 333 | 67 | 83.2 | 16.8 |
| | 2004 | 26 | 17 | 09 | 65.4 | 34.6 |
| | 2005 | 411 | 341 | 07 | 82.9 | 1.7 |
| விவசாயம் | 2002 | 186 | 186 | - | 100.0 | - |
| | 2003 | 194 | 191 | 03 | 98.4 | 1.6 |
| | 2004 | 377** | 372 | 05 | 98.7 | 1.3 |
| | 2005 | 188 | 166 | 22 | 88.3 | 11.7 |

| பீடம் | ஆண்டு | தோற்றியவர்களின் எண்ணிக்கை | சித்தியெய்தியவர்களின் எண்ணிக்கை | குறை சித்தி அல்லது சித்தியெய்தாதவர் களின் எண்ணிக்கை | தோற்றிய எண் ணிக்கையின் நூற்று வீதமாக சித்தியெய்தி யோர் எண்ணிக்கை | தோற்றிய எண் ணிக்கையின் நூற்று வீதமாக சித்தியெய்தாது/ குறை சித்தி யெய்தியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| பல் | 2002 | 77 | 45 | 32 | 58.4 | 41.6 |
| மருத்துவம் | 2003 | 74 | 57 | 17 | 77.0 | 23.0 |
| | 2004 | 83 | 52 | 31 | 62.6 | 37.4 |
| | 2005 | 73 | 67 | 06 | 91.8 | 8.2 |
| பொறியியல் | 2002 | 494 | 259 | 235 | 52.4 | 47.6 |
| | 2003 | 494 | 279 | 215 | 56.5 | 43.5 |
| | 2004 | 513 | 284 | 229 | 55.4 | 44.6 |
| | 2005 | தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | | | | |
| விஞ்ஞானம் | 2002 | பொது 399 | 213 | 186 | 53.4 | 46.6 |
| | | விசேட 73 | 72 | 01 | 98.6 | 1.4 |
| | 2003 | பொது 621 | 464 | 157 | 74.7 | 25.3 |
| | | விசேட 73 | 73 | - | 100.0 | - |
| | 2004 | பொது 332 | 260 | 72 | 78.3 | 21.7 |
| | | விசேட 107 | 106 | 01 | 99.1 | 0.9 |
| | 2005 | பொது 201 | 148 | 53 | 73.6 | 26.4 |
| | | விசேட 88 | 88 | இல்லை | 100 | இல்லை |
| கால்நடை | 2002 | 60 | 55 | 03* | 91.7 | 5.0 |
| மருத்துவம் | 2003 | 61 | 55 | 06 | 90.2 | 9.8 |
| | 2004 | 64 | 34 | 30 | 53.1 | 46.9 |
| | 2005 | 139 | 129 | 05 | 92.8 | 3.6 |

* இரு மாணவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

** இரு தொகுதிகள் ஒரே தடவையில் சேர்க்கப்பட்டிருந்தன.

(இ) 2005 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பீடத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக் கோப்பு, உள்ளபடியான ஆளணிக் கோப்பு, கல்விசார் லீவைப் பெற்ற விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தின் கல்விசார் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது :-

| பீடம் | திணைக்களம் | பதவி | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | (மிகை)/ பற்றாக்குறை | கல்விசார் லீவில் விடுவிக்கப் பட்ட எண்ணிக்கை | சேவையில் உள்ளவர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கால்நடை | 04 | பேராசிரியர் | 06 | 05 | 01 | - | 05 |
| மருத்துவம் | | விரிவுரையாளர் | 36 | 24 | 12 | 08 | 24 |
| பல் மருத்துவம் | 07 | பேராசிரியர் | 14 | 06 | 08 | - | 06 |
| | | விரிவுரையாளர் | 60 | 55 | 05 | 14 | 43 |
| விவசாயம் * | 09 | பேராசிரியர் | 19 | 26 | (07) | - | 19 |
| | | விரிவுரையாளர் | 95 | 78 | 17 | 13 | 95 |

| *பீடம்* | *திணைக்களம்* | *பதவி* | *அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை* | *உள்ளபடியான எண்ணிக்கை* | *(மிகை)/ பற்றாக்குறை* | *கல்விசார் லீவில் விடுவிக்கப் பட்ட எண்ணிக்கை* | *சேவையில் உள்ளவர் களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|---|---|---|---|
| பொறியியல் * | 08 | பேராசிரியர் | 10 | 03 | 07 | - | 03 |
| | | விரிவுரையாளர் | 104 | 57 | 47 | 47 | 53 |
| | | ஆராய்ச்சி உதவியாளர்கள் | 02 | - | - | - | - |
| | | வழிகாட்டிகள் (தகவல் தொழில் நுட்பவியல்) | 05 | 04 | 01 | - | 04 |
| | | உதவி ஆசிரியர்கள் | 33 | 18 | 15 | - | 18 |
| | | தற்காலிக வழிகாட்டி | 25 | 17 | 18 | - | 17 |
| | | தற்காலிக விரிவுரையாளர் | - | 04 | 04 | - | 04 |
| கலை | 16 | பேராசிரியர் | 41 | 39 | 02 | - | 36 |
| | | விரிவுரையாளர் | 161 | 142 | 19 | 30 | 119 |
| மருத்துவம் | 17 | பேராசிரியர் | 24 | 24 | - } | 43 } | 93 |
| | | விரிவுரையாளர் | 111 | 111 | - | - | |
| | | உதவி ஆராய்ச்சியாளர்கள் (தற்காலிகம்) | 01 | - | 01 | - | - |
| விஞ்ஞானம் | 09 | பேராசிரியர் | 27 | 30 | (03) | 06 | 23 |
| | | விரிவுரையாளர் | 90 | 82 | 08 | 19 | 63 |
| | | உதவி ஆசிரியர்கள் | 27 | 27 | - | - | 22 |
| | | தற்காலிக உதவி ஆராய்ச்சியாளர்கள் | 02 | 04 | 02 | - | 03 |
| | | வழிகாட்டி | 14 | 08 | - | 01 | 07 |

(*) கல்விசார் பதவியணியினரின் வெற்றிடங்களுக்காக தற்காலிக விரிவுரையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

3.3 ***ஒப்பந்த நிர்வாகம்.***- பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன :-

(அ) பல்கலைக்கழகத்தின் கட்டிடப் பழுதுபார்த்தல் மற்றும் நிர்மாணிப்புகளுக்கு உரிய ரூபா 94,696,119 செலவினமாக 36 கைத்தொழில்களுக்குரிய உடன்படிக்கைகளின் பிரகாரம், 2000 முதல் 2004 வரையான ஆண்டின்போது வேலை முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும், 2004, திசெம்பர் 31 இல் உள்ளவாறும் ரூபா 45,124,289 ஆன வேலைகள் மேற்கொள்ளப்படாது கைவிடப்பட்டிருந்தது. அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்காக 2005 ஆம் ஆண்டின்போது முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் கைத்தொழில் மேற்கொள்ளப்படாது குறைபாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட வேலை தொடர்பாக ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விடுதிகளின் மலசலகூட பழுதுபார்த்தலுக்கு உரிய 6 கைத்தொழில் நடவடிக்கைகள் ஆய்வு செய்யப்படுகையில், ஒப்பந்தத் தொகையில் 15% முதல் 95% வரையிலான பணத்தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், பழுதுபார்த்தலின் முக்கிய குறிக்கோளான வடிகாலமைப்பு முறையாக பழுதுபார்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உடன்படிக்கையின் பிரகாரம் 2004, ஒகத்து 31 முதல் 2005, ஏப்பிறல் 28 வரையான காலப்பகுதியின்போது ஆரம்பிக்கப்பட்டு 2005, நவெம்பர் 5 இல் வேலை நிறைவேற்றப்பட வேண்டிய மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 57,662,341 ஆனதுடன் 13 செயற்பாடுகளுக்காக அதுவரை செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 26,182,612 ஆகும்.

(ஈ) சங்கமித்தா மண்டபத்தின் 6 மலசலகூடங்களை திருத்தும் செயற்பாட்டிற்காக 5 வேலைத்திட்டங்களின்கீழ் மதிப்பிடப்பட்ட தொகைக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைக்காக முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 207,147 செலுத்தப்பட்டிருந்தது.

(உ) பல்கலைக்கழக நூலக வலையமைப்பின் புத்தக விபரப்பட்டியல் தகவல்களை மென்பொருள் ஊடாக கணனிமயமாக்குவதற்காக 2004, ஓகத்து 10 அன்று ஒப்பந்தக்காரர் ஒருவருடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன :

(i) ஆகக்குறைந்த விலைகள் முன்வைத்த கேள்வியாளர் ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கையில், கேள்விப் பிணையை கேள்வியுடன் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தினால், கேள்வியை அவருக்கு வழங்கியிராததுடன் இரண்டாவதாக ஆகக்குறைந்த விலையைச் சமர்ப்பித்த கேள்வியாளருக்கு ஒப்பந்தம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால், பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 249,901 ஆகும்.

(ii) ஒப்பந்தம் வழங்கப்படுகையில் மென்பொருள் தரவுகளின் பிழைகளைச் சீராக்கும் சீராக்கல் நடவடிக்கைகள் அவ் ஒப்பந்தக்காரருக்கே வழங்கப்பட்டிராமை பிரச்சினைக்குரியதாகியுள்ளது. திருத்தியமைக்கும் நடவடிக்கைக்காக கேள்வி நடைமுறைக்கு புறம்பாக வெளியாட்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்நடவடிக்கைக்காக ரூபா 241,523 செலுத்தப்பட்டிருந்தது. இக்கொடுப்பனவிற்காக பின்பற்றப்பட்ட முறை தெளிவுபடுத்தப்படவில்லை.

(iii) தரவுகள் கணனிமயமாக்கல் மற்றும் தொகுத்தலுக்காக பல்கலைக்கழக பதவியினரினூடாக மேற்கொள்ளப்படுவதற்கும் இதற்காக பல்கலைக்கழகத்தில் உள்ள கணனி தொடர்பாக திறமையான அறிவைக் கொண்ட உத்தியோகத்தர்கள்/விரிவுரையாளர்களின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான கவனம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தரவுகள் கணனிமயமாக்கப்படுதலும் தொகுத்தல் நடவடிக்கைக்காக ரூபா 1,147,541 செலவிடப்பட்டிருந்தது. எனினும், அவசியமான சரியான தகவல்கள் 2006, பெப்புருவரி 14 இல் உள்ளவாறும் பெறப்பட்டிருக்கவில்லை.

3.4 ***முகாமைத்துவ திறமையீனங்கள்.***- பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன :-

(அ) பொருளாதாரச் சிக்கல் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு, புலமைப்பரிசில் வழங்குவதற்காக வெளியாட்களால் பல்கலைக்கழகத்திற்கு பணம் வழங்கப்பட்டிருந்தது. இப்பணம் முதலீடு செய்யப்பட்டு பெறப்படும் வட்டியில் 80% அளவான தொகை அந்நடவடிக்கைக்காக பயன்படுத்துவதற்கு நிர்வாக சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், குறிக்கோளாகக் கொண்ட நடவடிக்கை முறையாக மேற்கொள்ளப்படுவதற்கு முறையான நடவடிக்கை தயாரிக்கப்பட்டிராமையால் முன்னைய வருடத்திற்காகப் பெறப்பட்டிருந்த வட்டியில் 33% அளவு மாத்திரம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) குறித்த செயற்பாட்டிற்காக பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த ரூபா 11,974,374 ஆன 44 நன்கொடைகள் 2005, திசெம்பரில் உள்ளவாறும் இந்நடவடிக்கைக்காக பயன்படுத்தப்பட்டிராததுடன் சில சந்தர்ப்பங்களில் நன்கொடை வழங்குபவர்களால் குறிப்பிடப்பட்டிருந்த செயற்பாடுகளுக்குப் புறம்பான செயற்பாடுகளுக்காக அப்பணத்தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) விவசாய விஞ்ஞான பீடத்தில் சுழற்சி நிதியத்திலிருந்து செலவை மேற்கொள்வது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன :

(i) 2005, ஓகத்து 24 வரை செலவின மதிப்பீடு பெறப்பட்டிராத 6 சந்தர்ப்பங்களிலும் இந்நிதியத்திலிருந்து ரூபா 320,000 ஆன முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் முன்னர் பெறப்பட்ட முற்பணத்தைத் தீர்ப்பதற்கு முன்னர் மீள முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) சில சந்தர்ப்பங்களில், உற்பத்தி நடவடிக்கைகளுக்கு அவசியமான பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகையில் கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதியத்தின்கீழ் முக்கிய உற்பத்தியான யோகட் மற்றும் இறைச்சி சார்ந்த உணவு வகைக்கான நியமமான கிரயம் கணக்கிடப்பட்டிருந்தபோதிலும் இதன்படி, உள்ளபடியான உற்பத்திக்கும் உள்ளபடியான உள்ளீட்டிற்கும் இடையேயான முரண் கணிப்பிடப்பட்டிராததுடன் இதற்காக அவசியமான தகவல்களும் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உடன்படிக்கை மற்றும் பிணை மீறப்பட்டு, வெளிநாட்டிற்குச் சென்றிருந்த 19 விரிவுரையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தொகையை அவர்களது பணிக்கொடை நிதியத்தில் இருந்து அறவிடப்படுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இற்றைவரை அப்பணம் அறவிடப்பட்டிராததுடன், பணிக்கொடை நிதிய மீதிக்கு மேலாக இருந்த பிணைப் பெறுமதியான ரூபா 8,028,128 ஐ பிணையாளிகளிடம் இருந்தோ அல்லது சட்ட நடவடிக்கைகள் மூலமோ அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பல்கலைக்கழக நூலகத்திற்காக 2003 ஆம் 2004 ஆம் ஆண்டுகளின் போது வார மஞ்சரிகளைப் பெறுவதற்காக சந்தாப் பணமாக ரூபா 38,555 செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறும் வார மஞ்சரிகள் நூலகத்தில் பெறப்பட்டிராததுடன் உரிய பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின்போது கணக்குகளிலிருந்து பதிவளிக்கப்பட்ட ரூபா 10,106,077 ஆன முற்பணங்கள், கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் மற்றும் வைப்பு மீதிகளை இனங்காண்பதற்காக அரச முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால், பின்பற்றப்பட வேண்டும் என கட்டளையிடப்பட்ட நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

3.5 ***இனங்காணப்பட்ட இழப்புகள்.***- பின்வரும் இழப்புகள் அவதானிக்கப்பட்டன :-

(அ) பூங்கா நிர்வாகப் பதவிக்காக விண்ணப்பித்த போதிலும், ஆட்சேர்க்கப்பட்டிராத விண்ணப்பதாரி ஒருவரால் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் அவ்விண்ணப்பதாரிக்கு ரூபா 25,000 ஆன நட்டஈடு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பொறியியல் பீட நூலகப் பொறுப்பாளரால் 2004 ஆம், 2005 ஆம் ஆண்டுகளுக்காக இரு வெளிநாட்டு சஞ்சிகைகள் கோரப்பட்டிருக்கையில் பிரதான நூலகப் பொறுப்பாளரினாலும், அவ்வெளிநாட்டு சஞ்சிகைகள் இரண்டும் கோரப்பட்டிருந்தமையால் ரூபா 311,207 ஆன நிதி இழப்பு ஏற்பட்டிருந்தது.

(இ) உடன்படிக்கை மீறிய 38 விரிவுரையாளர்களின் கோவைகள் காணாமற்போன காரணத்தினால் பிணைத் தொகையில் ரூபா 7,573,673 ஐ அறவிட முடியாதிருந்தது.

3.6 ***விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்.***- பின்வரும் விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள் அவதானிக்கப்பட்டன :

(அ) 12 வாகனங்கள் இயற்கை அழிவுகளுக்கு உட்பட்டு பல்கலைக்கழக வளாகத்தில் சேதமுறுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பூங்காப் பகுதிக்கு வழங்கப்பட்டிருந்த ஜீப் வண்டி ஒன்று 2002 ஆம் ஆண்டு முதலும் விவசாய பீட-விஞ்ஞான திணைக்களத்திற்குரிய ஜீப் வண்டி ஒன்று 2004, திசெம்பர் முதல் 2005, செத்தெம்பர் வரையும் விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) 2001 ஆம் ஆண்டின்போது ஜயிகா உதவியின்கீழ் வழங்கப்பட்டிருந்த பல் மருத்துவ உபகரணங்களில் ஒரு பகுதி முறையாக பதிவுசெய்யப்பட்டிராது 2005 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் விளைவற்று அறைகளில் தேக்கிவைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2005, நவெம்பர் 8 இல் உள்ளவாறு ரூபா 13,898 ஆன தொக்குகள் பல வருடகாலமாக பயன்படுத்தப்படாதிருந்தன.

3.7 ***புறனடையான விடயங்கள்.***- பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன :

(அ) பல்கலைக்கழகத்தால் நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்ட பொல்கொல்ல, தொடங்கொல்ல மற்றும் மஹஇலுப்பலமவில் உள்ள காணிகள் சட்டபூர்வ உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிர்வாக சபை அங்கீகாரம் இன்றியும் தகுதிவாய்ந்த உத்தியோகத்தரின் அங்கீகாரம் இன்றியும் வெளிநாட்டு உதவியாகப் பெறப்பட்டிருந்த ஓர் வாகனத்திற்கு வேறோர் வாகனத்தின் டீசல் இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்டிருந்ததுடன், அவ்வாகனத்தின் பதிவை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.8 ***பாதீட்டுக் கட்டுப்பாடு.***- பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன :-

(அ) பழைய மருத்துவக் கட்டிடத்திற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் ரூபா 20,000,000 உம், கட்டிடத்திற்கான ஏற்பாடுகளில் ரூபா 4,438,450 உம் அங்கீகாரம் இன்றி மூலதனச் சொத்துக்கள் புனரமைப்புக் கணக்குகளிற்கு மாற்றப்பட்டு செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) செலவின விடயம் 23 இன் கீழ் மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு மேலாக ரூபா 280,569,104 செலவிடப்பட்டிருந்ததுடன் இதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

3.9 ***மாணவருக்கான கிரயம்.***- மீளாய்வாண்டின்போதான ஒரு மாணவனின் கிரயத்தை முன்னைய ஆண்டுடனானதுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 34,588 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

4. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.**- கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் காலத்திற்குக்காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது :-

(அ) காசும் வங்கிக் கணக்கும்
(ஆ) கொள்வனவுகள்
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) நூலக நடவடிக்கைகள்
(உ) முற்பணங்கள்
(ஊ) நிலையான சொத்துக்கள்
(எ) இருப்புக் கட்டுப்பாடும் பொருட் பதிவும்
(ஏ) வாகனக் கட்டுப்பாடு
(ஐ) பதிவேடுகளில் பேணப்படல்

எஸ். சீ. மாயாதுன்னே,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

## பேராதனைப் பல்கலைக்கழகம்

### *9.3 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று*

| விபரம் | குறிப்பு இல. | அட்ட வணை | பக்க இல. | பொது நிதி பல்கலைக்கழகம் ரூபா ச. | வெளி. பரீட்சை நிலை ரூபா ச. | கிழக்கு, யாழ். அலகு புலம்பெயர் மாணவர்களுக்காக ரூபா ச. | மொத்தம் 2005 ரூபா ச. | மொத்தம் 2004 ரூபா ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள் :** | | | | | | | | |
| ***நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை :*** | | | | | | | | |
| சொத்துக்களும், இயந்திரங்களும், உபகரணங்களும் | 01 | H.H1 | 14-16 | 3,416,221,684.82 | 2,454,985.51 | 2.00 | 3,418,676,672.33 | 3,635,485,622.43 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை | 02 | A1 | 17 | 270,981,209.34 | | | 270,981,209.34 | 148,380,002.18 |
| வரையறுக்கப்பட்ட நிதி முதலீடு 1 | 03 | I | 18-22 | 69,299,657.47 | | | 69,299,657.47 | 66,158,000.62 |
| வரையறுக்கப்பட்ட நிதி முதலீடு 2 | 04 | J | 23-34 | 186,965,689.59 | | | 186,965,689.59 | 173,142,812.87 |
| | | | | **3,943,468,241.22** | **2,245,985.51** | **2.00** | **3,945,923,228.73** | **4,023,166,438.10** |
| ***நடைமுறைச் சொத்துக்கள் :*** | | | | | | | | |
| இருப்புகள் | 05 | K | 35 | 35,028,296.71 | 1,451,986.43 | | 36,480,283.14 | 40,001,650.57 |
| கொண்டுவரும் பொருட்கள்-80010240 | 06 | K-1 | 36-40 | 18,275,728.82 | | | 18,2175,728.82 | 18,453,099.45 |
| பல்கலைக்கழக ஊழியர்களின் தவறுகளால் கிடைக்கக்கூடியவை ஒப்பந்தங்கள் பிணை மீறல்கள்-12016200 | 07 | K-2 | 41-43 | 66,765,739.19 | | | 66,765,739.19 | 67,407,403.98 |
| ஏனைய பல்கலைக்கழகங்களிலிருந்து கிடைக்கக்கூடியவை | 08 | Q | 44 | 149,476.38 | 59,217,660.68 | 3,819,554.49 | 13,837,697.24 | 14,220,570.55 |
| மற்றும் நிறுவனங்கள் | 09 | L | 45 | 14,876,725.11 | | | 14,876,725.11 | 15,888,569.63 |
| விநியோகங்கள் மற்றும் சேவை முற்பணங்கள் | 10 | P | 46 | 3,368,114.05 | | | 3,368,114.05 | 5,843,053.81 |
| கடன்களும் மாணவர்களுக்கு முற்பணங்களும் | 11 | N | 47 | 1,450.00 | | | 1,450.00 | 278,945.00 |
| கடன்களும் ஊழியர்களுக்கு முற்பணங்களும் | 12 | M | 48 | 88,050,718.73 | 2,081,576.00 | 28,141.90 | 90,160,436.63 | 100,766,562,93 |
| ஏனைய முற்பணங்கள் | 13 | O | 49 | 8,989,610.12 | 124,253.55 | | 9,113,863.47 | 13,499,725.53 |
| மீள் கொடுப்பனவுகள் | 14 | R | 50 | 3,049.90 | | | 3,049.90 | 3,049.90 |
| வங்கியில் காசு-காசுப்புத்தக மீதி | 15 | S | 51-52 | 94,417,413.23 | 499,192.77 | 7,606.35 | 94,924,212.35 | 71,818,579.54 |
| | | | | **329,926,322.24** | **63,374,669.23** | **3,855,302.74** | **347,807,299.90** | **348,181,210.89** |
| ***மொத்தச் சொத்துக்கள் :*** | | | | **4,273,394,563.46** | **65,829,654.74** | **3,855,304.74** | **4,293,730,528.63** | **4,371,347,648.99** |
| **பொறுப்புகள் :** | | | | | | | | |
| நடைமுறை பொறுப்புகள் | | | | | | | | |
| வைப்புகள் | 16 | U | 53 | 5,372,997.50 | 4,903.16 | | 5,377,900.66 | 6,084,149.58 |
| ஏனைய பல்கலைக்கழகங்களில் இருந்து கிடைக்கக்கூடியவை | 17 | W | 54 | 28,337,452.13 | | 903,982.84 | 903,982.84 | 900,303.34 |
| மற்றும் நிறுவனங்கள் | 18 | T | 55 | 38,490,907.03 | 373,364.61 | 45,990.52 | 17,898,719.98 | 17,737,128.21 |
| கடன்கொடுத்தோர்கள் | 19 | V | 56 | 7,686,099.53 | 1,351,036.27 | | 9,037,135.80 | 18,783,197.54 |
| **கடன் கொடுத்தோர்** | | | | 79,887,456.19 | 1,729,304.04 | 949,973.36 | 33,217,739.28 | 43,504,778.67 |
| **கடன் கொடுத்தோர் செலவுகள்** | | | | 4,193,507,107.27 | 64,100,350.70 | 2,905,331.38 | 4,260,512,789.35 | 4,327,842,870.32 |

* தயவுசெய்து குறிப்பு அட்டவணை இல. 'T' & 'W' ஐப் பார்க்க.

| விபரம் | குறிப்பு இல. | அட்ட வணை | பக்க இல. | பல்கலைக்கழகம் | பொது நிதி கிழக்கு, வெளி. பரீட்சை நிலை | மொத்தம் யாழ். அலகு புலம்பெயர் மாணவர்களுக்காக | மொத்தம் 2005 | 2004 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| **தேறிய சொத்துக்கள்/பொறுப்புகள் :** | | | | | | | | |
| **மூலதனம் :** | | | | | | | | |
| 1. மூலதனம் செலவிடப்பட்ட மூலதன மானியம் | | | | 1,893,365,304.52 | 1,073,686.50 | 1,097,232.67 | 1,895,536,223.69 | 1,800,581,326.64 |
| 2. மூலதனம் செலவிடப்பட்ட மூலதன மானியம் நடைமுறை வேலைகள் | 20-1 | A | 17 | 201,249,261.52 | | | 201,249,261.52 | 92,616,873.13 |
| 3. செலவிடப்படாத மூலதன மானியம்-கட்டிடம் | 20-1 | A | 57 | 21,256,729.25 | | 536,342.33 | 21,793,071.58 | 14,171,828.33 |
| **குறிப்பிடக்கூடிய ஒதுக்கங்கள் :** | | | | | | | | |
| செலவிடப்படாத மூலதன மானியம்-உபகரணம் | | | | | | | | |
| தளபாடம், நூலக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 20-2 | B | 58 | 7,600,769.07 | | | 7,600,769.07 | 28,295,117.35 |
| **புனர் நிர்மாணம் :** | | | | | | | | |
| (1) புனர் நிர்மாணம்-கிடைக்கப்பெற்ற மானிய மூலதன வேலை நடைபெறுகின்றன | | | | 69,731,947.82 | | | 69,731,947.82 | 52,946,763.9 |
| (2) புனர் நிர்மாணம்-செலவிடப்படாத மானியம் | 20-3 | B:1 | 59 | (2,374,964.93) | | | (2,374,964.93) | 312,987.18 |
| (3) அன்பளிப்புகள்-கட்டிடங்கள் | | | | 1,225,094,707.50 | | | 1,225,094,707.50 | 1,225,101,020.00 |
| அன்பளிப்புச் சொத்துக்கள் | | | | 1,050,246,405.74 | | | 1,050,246,405.74 | 988,622,335.11 |
| வெளிநாட்டு உதவிகள் | | | | 537,765,951.84 | | | 537,765,951.84 | 500,745,951.84 |
| **ஒதுக்கங்கள் :** | | | | | | | | |
| (1) நிலையான சொத்துகளின் இருப்புகளின் ஒதுக்கம் | | | | 2,440,915,018.34 | 4,542,658.83 | | 2,445,457,677.17 | 2.445,457,677.17 |
| (2) நிறுவனங்களின் பொது ஒதுக்கங்கள் | | | | (4,084,321,138.05) | 53,975,062.87 | 1,229,356.38 | (4,029,116,718.80) | (3,514,208,615.51) |
| (3) ஓய்வுபெற்றோர் பணிக்கொடை | | | | 441,089,375.15 | | | 441,089,375.15 | 328,374.943.00 |
| **கட்டுப்படுத்தப்பட்ட நிதி :** | | | | | | | | |
| (1) (a) அளிக்கப்பட்ட நிதி | | | | 70,067,539.70 | | | 70,067,539.70 | 66,119,232.59 |
| (b) மாணவ கொடுப்பனவு நிதி | | | | | | 42,400.00 | 42,400.00 | 42,400.00 |
| (2) விஷேட மானியம் | 22-2 | D | 71 | 1,617,917.50 | | | 1,617,917.50 | 1,613,585.00 |
| (3) ஆராய்ச்சி மானியம் | | | | 86,246,671.83 | | | 86,246,671.83 | 69,007,702.18 |
| (4) காசு அன்பளிப்புகள் | | | | 60,038.09 | | | 60,038.09 | 60,038.09 |
| (5) ஏனைய நிதிகள் | | | | 233,895,572.38 | 4,508,942.50 | | 238,404,514.88 | 227,981,705.03 |
| | | | | 4,193,507,107.27 | 64,100,350.70 | 2,905,331.38 | 4,260,512,789.35 | 4,327,842,870.32 |

சரியென உறுதி செய்யப்படுகிறது.

பேராசிரியர் கே. ஜீ. ஏ. குணசேகர
உப வேந்தர்

எம். எஸ். எம். முஸ்தபா
பதில் பதிவாளர்

ஏ. சிவகுரு
பதில் நிதியாளர்.

## பேராதனைப் பல்கலைக்கழகம்

### 9.4 31, திசெம்பர் 2005 முடிவில் உள்ளவாறான நிதி அறிக்கை

| விபரம் | குறிப்பு இல. | பல்கலைக்கழகம் | 2005 பொது நிதி | வெளிவாரி பரீட். நிலை. | மொத்தம் 2005 | மொத்தம் 2004 |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| **செயற்பாடு வருமானம் :** | | | | | | |
| **மீண்டெழும் செலவுக்கான மானியம்** | | | | | | |
| (a) அரச மானியம் | | 1,185.275,000.00 | | | 1,185,275,000.00 | 932,410,000.00 |
| ஏனைய வருமானங்கள் : | | | | | | |
| (b) அரச மானியம்-மாணவர் நன்கொடை | | 14,953,200.00 | | | 14,953,200.00 | 10,848,950.00 |
| (c) அரச மானியம்-மஹாபொல | | 36,453,600.00 | | | 36,453,600.00 | 14,252,200.00 |
| | | | 1,236,681,800.00 | | 1,236,681,800.00 | 957,511,150.00 |
| பராமரிப்பு புனர்நிர்மாண மானியம் | | - | 36,176,371.11 | | 36,176,371.11 | 29,533,503.90 |
| முதலீடுகளில் இருந்து வட்டி | | 10,250,968.67 | | | 10,250,968.67 | 9,731,661.24 |
| ஊழியர் கடன்களிலிருந்து வட்டி | | 3,818,535.32 | | 82,659.33 | 3,901,194.65 | 4,946,532.16 |
| சொத்துக்களிலிருந்து வாடகை | | 3,615,869.62 | | | 3,615,869.62 | 4,591,648.37 |
| பழைய பண்டகசாலையின் விற்பனை | | 111,447.50 | | | 111,447.50 | 991,525.50 |
| உற்பத்திகளின் விற்பனை | | 72,054.95 | | | 72,054.95 | 70,365.00 |
| ஏனைய பெறுகைகள் | | 8,117,314.34 | | 134,716.30 | 8,252,030.64 | 9,871,198.52 |
| பதிவுக் கட்டணம் (பட்டதாரி மாணவர்கள்) | | 1,856,628.00 | | 5,868,376.50 | 7,725,004.50 | 5,834,297.50 |
| கற்கை கட்டணம் (பட்டதாரி மாணவர்கள்) | | | | | - | 30,985.00 |
| கற்கை கட்டணம் (பட்டப்பின்படிப்பு மாணவர்கள்) | | 957,690.28 | | | 957,690.28 | - |
| பரீட்சைக் கட்டணம் (பட்டதாரி மாணவர்கள்) | | 881,634.00 | | 3,967,390.00 | 4,849,024.00 | 9,740,323.00 |
| பரீட்சைக் கட்டணம் (பட்டப்பின்படிப்பு மாணவர்கள்) | | | | | - | - |
| வெளியீடுகளின் விற்பனை | | 121,200.00 | | 1,729,650.00 | 1,850,850.00 | 939,212.00 |
| நூலக தண்டப்பணம் | | 423,518.66 | | 423,518.66 | 423,518.66 | 447.885.09 |
| மருத்துவக் கட்டணம் | | 331,396.50 | | | 331,396.50 | 302,205.00 |
| ஏனைய நடவடிக்கைகளில் இருந்தான வருமானம் | | 8,006,925.40 | 38,565.183.24 | | 8,006,925.40 | 8,102,251.06 |
| | | | 1,311,423,354.35 | 11,782,792.13 | 1,323,206,146.48 | 1,042,644,743.34 |
| **செயற்பாட்டு செலவுகள் :** | | | | | | |
| தனிநபர் ஊதியம் | | | | | | |
| பிரயாணம் | | 1,127,547,295.90 | | 8,788,125.34 | 1,136,335,421.24 | 841,445,050.16 |
| பயன்படுத்திய காகிதாதிகளும் விநியோகங்களும் | | 4,293,911.64 | | 9,650.00 | 4,303,561.64 | 3,595,465.79 |
| பராமரிப்புச் செலவுகள் | | 56,237,053.49 | | 860,920.96 | 57,097,974.45 | 55,071,834.59 |
| ஒப்பந்த சேவைகள் | | 4,671,459.16 | | 84,309.25 | 4,755,768.41 | 5,539,205.29 |
| ஏனைய செயற்பாட்டு சேவைகள் | | 114,743,012.05 | | 1,081,428.59 | 115,824,440.64 | 110,895,856.66 |
| தேய்மானம் மற்றும் கடன்தீர் நிதியூடாகக் கடன் குறைத்தல் | | 124,298,522.95 | | 4,050,880.64 | 128,349,403.59 | 81,759,281.77 |
| மொத்த செயற்பாட்டு செலவுகள் : | | | | | | |
| இக்காலப்பகுதிக்கான கையிருப்பு/(குறை) | | 397,757,015.04 | | 658,419.21 | 398,415,434.25 | 374,309,280.15 |
| | | | 1,829,548,270.23 | 15,533,733.99 | 1,845,082,004.22 | 1,472,615,974.41 |
| | | | (518,124,915.88) | (3,750,941.86) | (521,875,857.74) | (429,971,231.07) |
| **இக்காலப் பகுதியில் உள்ளவாறான கையிருப்பு/(குறை)** | | | (518,124,915.88) | (3,750,941.86) | (521,875,857.74) | (429,971,231.07) |

**பேராதனைப் பல்கலைக்கழகம்**
***9.5 காசுப்பாய்ச்சல் கூற்று***
***31, திசெம்பர் 2005***

| | 2005<br>(இலங்.) ரூபா ச. | 2004<br>(இலங்.) ரூபா ச. |
|---|---|---|
| 1. **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| **சாதாரண நடவடிக்கைகளில் இருந்தான மேலதிகம்/குறை** | (521,875,857.74) | (429,971,231.17) |
| **காசல்லாத அசைவுகள் :** | | |
| *தேய்வுகள் :* | 398,415,434.25 | 374,309,280.15 |
| பணிக்கொடையும் ஏனைய ஒழுங்குபடுத்தல்களும் | 139,089,980.00) | (89,382,094.50) |
| வட்டி வருமானம் | (10,250,968.67) | (9,731,661.24) |
| தொழில்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்படு மேலதிகம்/குறை | 5,378,587.84 | 23,988,482.24 |
| *தொழில்படு மூலதன மாற்றங்கள் :* | | |
| (அதிகரிப்பு)/ குறைவு இருப்பு | 3,521,367.43 | (12,381,131.92) |
| (அதிகரிப்பு)/ குறைவு பொருட்கள் மட்டத்தில் | 177,370.63 | 1,656,998.85 |
| (அதிகரிப்பு)/ குறைவு பிணை முறித்தல்களிலிருந்து பெறக்கூடியவை | 641,664.79 | (2,746,721.07) |
| (அதிகரிப்பு)/ குறைவு ஏனைய பல்கலைக்கழகங்களிலிருந்து தண்டப்பணம் | 382,873.31 | (541,214.27) |
| (அதிகரிப்பு)/ குறைவு கடன்பட்டோர் | 1,011,844.52 | (3,811,798.18) |
| (அதிகரிப்பு)/ குறைவு விநியோகங்களும் முற்பணங்களும் | 2,474,939.76 | 3,242,851.23 |
| (அதிகரிப்பு)/ குறைவு மாணவர்களுக்கு கடன்களும் முற்பணமும் | 277,495.00 | 600.00 |
| (அதிகரிப்பு)/ குறைவு ஊழியர்களுக்கு கடன்களும் முற்பணமும் | 10,606,126.30 | 3,201,727.02 |
| (அதிகரிப்பு)/ குறைவு ஏனைய முற்பணம் | 4,385,862.06 | (3,065,630.65) |
| (அதிகரிப்பு)/ குறைவு மீள் கொடுப்பனவு | - | 746,284.84 |
| (அதிகரிப்பு)/ குறைவு மீளளிக்கக்கூடிய வைப்புகள் | (706,248.92) | 74,368.04 |
| (அதிகரிப்பு)/ குறைவு கடன்கொடுத்தோர் | 161,591.77 | 6,197,999.57 |
| (அதிகரிப்பு)/ குறைவு ஏனைய பல்கலைக்கழகங்களிலிருந்து தண்டப்பணம் | 3,679.50 | (2,642.50) |
| (அதிகரிப்பு)/ குறைவு கடன் கொடுத்தோருக்கான செலவுகள் | (9,746,061.74) | 5,616,709.31 |
| வழங்கிய பணிக்கொடை | (26,375,518.00) | - |
| செயற்படு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசோட்டம் | (7,804,425.26) | 22,176,882.51 |
| 2. **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசோட்டம் :** | | |
| நிலையான சொத்துகளில் அதிகரிப்பு | (90,036,756.00) | (228,224,313.90) |
| நடைமுறை வேலைகள் | (122,601,207.00) | 98,505,829.12 |
| மட்டுப்படுத்திய நிதி முதலீடு I | (3,141,656.85) | (4,752,331.28) |
| மட்டுப்படுத்திய நிதி முதலீடு II | (13,822,876.70) | (25,812,316.69) |
| வட்டி வருமானம் | 1,638,364.00 | 8,604,068.69 |
| சுய நிதியிடல் செயற்திட்டம் | (168,376,795.19) | (149,738,116.99) |
| முதலீட்டு நடவடிக்கைகளின் தேறிய காசோட்டம் | (396,340,927.74) | (301,417,181.05) |
| 3. **நிதியிடல் நடவடிக்கைகளில் இருந்து காசோட்டம்:** | | |
| ***அரச மானியங்கள் :*** | | |
| உபகரணங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள் | 88,982,500.00 | 20,000,000.00 |
| கட்டிட நிகழ்ச்சித் திட்டம் | 96,817,500.00 | 19,500,000.00 |
| புனர்நிர்மாண மூலதன வகை | 55,000,000.00 | 43,000,000.00 |
| தகவல் தொழில்நுட்ப நிலையம் | - | 38,500,000.00 |
| அன்பளிப்பு உபகரணங்கள் (கற்பித்தல், விஞ்ஞானகூட உபகரணம் | - | 21,092,350.29 |
| சுய நிதியில் செயற்திட்டம் | 186,450,986.00 | 154,496,205.25 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசோட்டம்** | 427,250,986.00 | 296,588,555.54 |
| **காசும் காசுக்கு சமமானவற்றினதும் தேறிய அதிகரிப்பு** | 23,105,633.00 | 17,348,257.00 |
| **காசும் காசுக்கு சமமானவற்றினதும் வருட ஆரம்ப மீதி** | 71,818,579.00 | 54,470,322.00 |
| **காசும் காசுக்கு சமமானவற்றினதும் வருட இறுதி மீதி** | 94,924,212.00 | 71,818,579.00 |

## பேராதனைப் பல்கலைக்கழகம்

9.6 2005, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் பெறுபேற்று அறிக்கை

| *விவரணம்* | *2005 பொது நிதி* | | *2005 மொத்தம்* | *2004 மொத்தம்* |
|---|---|---|---|---|
| | *பல்கலைக்கழகம்* | *வெளிவாரி பரீட்சைகள் நிலையம்* | | |
| | *(இலங்.) ரூபா ச.* | *(இலங்.) ரூபா ச.* | *(இலங்.) ரூபா ச.* | *(இலங்.) ரூபா ச.* |
| செலவுகளுக்கு மேலதிக வருமானம் | (518,124,915.88) | (3,750,941.86) | (521,875,857.74) | (429,971,231.17) |
| கடந்த ஆண்டிலிருந்து கொண்டுவந்த மீதி | (3,573,163,976.62) | 57,726,004,73 | (3,515,437,971.89) | (3,088,124,586.68) |
| கூட்டு : கடந்த வருடத்தின் வருமானமும் ஏனையவைகளும் | 18,693,450.07 | - | 18,693,450.07 | 3,665,045.96 |
| | (4,072,595,442.43) | 53,975,062.87 | (4,018,620,379.56) | (3,514,430,771.89) |
| *கழி :* | | | | |
| சென்ற வருட செலவுகளும் ஏனைய திருத்தங்களும் | (8,614,612.73) | - | (8,614,612.73) | (1,007,200.00) |
| | (3,111,082.89) | | | |
| ஐந்தொகைக்கு கொண்டுசெல்லப்பட்ட மீதி | (4,084,321,138.05) | 53,975,062.87 | (4,027,234,992.29) | (3,515,437,971.89) |

(பேரா.) கே. ஜீ. ஏ. குணசேகர,
உப வேந்தர்.

எம். எஸ். எம். முஸ்தபா,
பதில் பதிவாளர்.

ஏ. சிவகுரு,
பதில் நிதியாளர்.

## பேராதனைப் பல்கலைக்கழகம்

***9.7 2005, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிகர் சொத்துக்களின் மாற்றம் தொடர்பான கூற்று***

| | *சேர்க்கப்பட்ட நிதி* | *மீள்மதித்தல் ஒதுக்கம்* | *மாற்றல் ஒதுக்கம்* | *மொத்தம்* |
|---|---|---|---|---|
| *2003, திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி* | *2,076,573,732.32* | *2,445,457,677.17* | - | *4,522,031,409.49* |
| நிதிப் பெறுபேறுகள் கூற்றில் கூறப்படாத தேறிய வருவாய்களும் நட்டங்களும் | 235,782,692.00 | - | - | 235,782,692.00 |
| இக்காலப் பகுதிக்கான மேலதிகம்/(குறை) | (429,971,231.17) | - | - | (429,971,231.17) |
| *2004, திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி* | *1,882,385,193.15* | *2,445,457,677.17* | - | *4,327,842,870.32* |
| நிதிப் பெறுபேறுகள் கூற்றில் கூறப்படாத தேறிய வருவாய்களும் நட்டங்களும் | 454,545,776.77 | - | - | 454,545,776.77 |
| இக்காலப் பகுதிக்கான மேலதிகம்/(குறை) | (521,875,857.74) | - | - | (521,875,857.74) |
| *2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி* | *1,815,055,112.18* | *2,445,457,677.17* | - | *4,260,512,789.35* |

**1971 ஆம் ஆண்டிற்கான 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13 (6) ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட தேவைகளை உள்ளடக்கிய, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மற்றும் 2005 ஆம் ஆண்டிற்கான சட்டப்படியான நிதிக்கூற்றின் அறிக்கையும் வருடாந்த கணக்குகளின் அறிக்கையும்**

(1) இந்தக் கணக்கீட்டுக் கூற்றுக்கள், 1971 ஆம் ஆண்டிற்கான 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின்படியும், 1978 ஆம் ஆண்டுக்கான 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 107 (B) மற்றும் 106 (1) ஆகிய பகுதிகளுக்கும் மற்றும் அதன்பின் நிகழ்ந்த திருத்தங்களுக்கும் அமைய தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டன.

(2) கணக்காய்வாளர் நாயகத்தினது அறிவுறுத்தல்களுடன் திறைசேரியிலிருந்து, விஞ்ஞானப் பட்டப்பின் படிப்புகள் நிறுவனம் (PGIS), விவசாய விஞ்ஞானப் பட்டப்பின் படிப்புகள் நிறுவனம் (PGIA) ஆகிய இரு சுயாதீன நிறுவனங்களினது கணக்குகளை ஒருங்கிணைக்க வேண்டிய தேவைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தது. இதற்கமைய திறைசேரியிலிருந்து அறிவுறுத்தல் கிடைத்தது. (தொடர்பு இல. PE/168/4/2003, 15 ஒற்றோபர், 2003, பொது நிறுவனங்களுக்கான பணிப்பாளருக்காகப் பிரதிப் பணிப்பாளர்).

(3) மேற்குறித்த இரு நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுகள் பல்கலைக்கழக நிதிக் கூற்றுகளுடன் இணைக்கப்படவில்லை.

(4) இந்தக் கணக்குகளின் முன்வைப்பும், விபரிப்பும் ஒரு பல்கலைக்கழகத்தின் வருடாந்தக் கணக்குக் கூற்றுக்களின் வழமையான முன்வைப்புகளின் பொதுவான கணக்கீட்டு நடைமுறைகளைப் பின்பற்றியும், இலங்கையின் பொதுத்துறை அமைப்புகளுக்கான கணக்கீட்டுத் தராதரத்தை ஒத்ததாகவும் அதன் கொள்கைகளுக்கு ஏற்றதாகவும் முடிக்கப்பெற்றன.

(A) **கணக்கு முக்கிய நிகழ்வுகள்**

| | அரச மானியம் | 2004<br>ரூபா | 2005<br>ரூபா |
|---|---|---|---|
| I | மீண்டெழும் செலவுகளுக்கான அரச மானியம் | 932,410,000 | 1,173,100,000 |
| II | மீண்டெழும் செலவுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பெற்ற மானியம் | | 12,175,000 |
| III | மீண்டெழும் செலவுகளுக்காக திறைசேரியூடாக பெருந்தோட்ட அமைச்சிடமிருந்து விவசாய விஞ்ஞான பீடம் பெற்ற விசேட மானியம் | 250,000 | 250,000 |
| IV | மகாபொல புலமைப்பரிசில்களுக்காக அரசினது மானியம் | 14,252,200 | 36,453,600 |
| V | உபகார நிதிக்காக அரசினது மானியம் | 10,848,950 | 14,953,200 |
| VI | மூலதனம் 101 புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 43,000,000 | 55,000,000 |
| VII | மூலதனம் 102 உபகரணம் மற்றும் நூல்கள், பருவ இதழ்கள் | 48,000,000 | 80,982,500 |
| VIII | மூலதனம் 103 கட்டட நிகழ்ச்சித் திட்டம் | 19,500,000 | 86,317,500 |
| IX | பேராதனைப் பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப நிலையம் | 9,000,000 | - |
| X | விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சிடமிருந்து மஹா இலுப்பள்ளமவிற்கான விசேட மானியம் | 590,541 | - |
| XI | த. தொ. முன்னேற்றம் :- | | |
| | * கணனிப் பொறியியல் மாணவர்களின் உள்ளெடுக்கும் தொகை அதிகரிப்பால் பொறியியல் பீடத்தில் கட்டட நிர்மாணம் | 5000,00 | 6,000,000 |
| | * நூலக தானியங்கிகள் | 1,500,000 | 2,500,000 |
| | * கலைப்பீடத்தில் கலை மற்றும் முகாமைத்துவ கற்கைகள் மாணவர்களிடையே தகவல் தொழில்நுட்பத் திறனை விருத்தி செய்தல் | - | 5,000,000 |
| | * தொடர் தொழில் வழிகாட்டல் | 5000,00 | - |
| | * பொது | 1,000,000 | - |
| XII | கல்வி உயர் கல்வி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொண்ட இணைப்பு நிதி-சீடா நிகழ்ச்சித் திட்டத்தால் நிதியளிக்கப்பட்ட மின் மற்றும் இலத்திரனியல் செயற்திட்டங்களின் ஆய்வு கொள்ளளவைக் கட்டியெழுப்புவதற்கான நிதி | 1,006,307 | |
| XIII | மின், இலத்திரனியல் பொறியியல் துணையின் விருத்திக்கான தகவல் தொழில் நுட்ப நிதியம் | 10,000,000 | ** 5,000,000 |
| | மொத்தம் | 1,092,357,998 | 1,447,731,800 |
| XIV | சுய நிதித் திட்டங்கள் | 154,496,205 | 186,450,986 |

* 2004 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 2005 இல் பெற்றுக்கொண்ட ரூபா 10 மில்லியன் உள்ளடங்கியது.

** 2004 ஆம் ஆண்டுக்கான மானியங்கள் ஆணைக்குழுவினால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 2005 இல் பெற்றுக்கொண்டது.

## கொழும்பு பல்கலைக்கழகம்

2006, திசெம்பர் 31 இல் ஐந்தொகை

| | குறிப்பு | 2005 (ரூபா) | | 2006 (ரூபா) | |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள் :** | | | | | |
| ***நடைமுறைச் சொத்தல்லாதவை :*** | | | | | |
| (அ) காணியும் கட்டிடங்களும் | | 646,096,063 | | 730,468,998 | |
| (ஆ) தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | | 250,593,334 | | 275,430,724 | |
| (இ) ஆய்வுகூட கற்பித்தல் உபகரணங்கள் | | 19,973,722 | | 129,631,400 | |
| (ஈ) இணைப்புக்களும் பொருத்திகளும் | | 2,449,170 | | 2,022,462 | |
| (உ) நூலகப் புத்தகங்களும் பருவ இதழ்களும் | | 41,480,738 | | 47,803,306 | |
| (ஊ) மோட்டார் வாகனங்கள் | | 19,017,100 | | 17,158,580 | |
| (எ) பட்டமளிப்பு அங்கிகள் | | - | | - | |
| (ஏ) ஏனையவை | | 40,214 | | 90,830 | |
| (ஐ) புதிய தொலைபேசி இணைப்பு | | 280,801 | 979,931,141 | 129,121 | 1,202,735,421 |
| நடைமுறை வேலைகள் | | | 187,797,980 | | 81,207,784 |
| முதலீடுகள் | | | 339,957,497 | | 366,887,070 |
| உபயோகமற்றதென விலக்கப்பட்ட பொருட்கள் | | | 268,654 | | |
| ***நடைமுறைச் சொத்துக்கள் :*** | | | | | |
| (அ) இருப்புக்கள், சேமிப்பு | | 3,734,855 | | 4,089,524 | |
| (ஆ) சில்லறைக் கடன்பட்டோர் | | 20,896,329 | | 29,600,659 | |
| (இ) உத்தியோகத்தர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் | | 59,267,850 | | 77,280,193 | |
| (ஈ) வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான முற்பணங்கள் | | 22,967,788 | | 19,917,908 | |
| (உ) நானாவித முற்பணங்கள் | | 12,189,557 | | 6,638,683 | |
| (ஊ) ஏனைய பல்கலைக்கழகங்களிலிருந்து வரவேண்டிய பணம் | | 1,659,115 | | 821,601 | |
| (எ) ஏனையவை | | 1,439,804 | | 756,602 | |
| (ஏ) முற்பணங்கள் | | 3,543,430 | | 923,075 | |
| (ஐ) பணம், பண சமானங்கள் | | 30,560,754 | 156,259,483 | 23,038,183 | 163,066,429 |
| மொத்தச் சொத்துக்கள் | | | 1,664,214,755 | | 1,813,896,703 |
| பங்குகள், பொறுப்புக்கள் மூலதனம் | | | | | |
| (அ) செலவிடப்பட்ட மூலதன மானியம் | | 2,178,552,615 | | 1,413,265,226 | |
| (ஆ) செலவிடப்படாத மூலதன மானியம் | | 74,229,416 | | (51,244,324) | |
| (இ) பரிசில்களும் நன்கொடைகளும் | | 44,020,725 | 2,296,802,756 | 49,882,410 | 1,411,903,311 |
| திரட்டப்பட்ட நிதியம் | | | | | |
| பொது ஒதுக்கம் | | 18,958,102 | | 18,958,102 | |
| வருமானச் செலவினக் கணக்கு | | (1,325,176,435) | (1,306,218,333) | (504,045,458) | (485,087,356) |
| ஒதுக்கங்கள், மட்டுப்படுத்தப்பட்ட நிதியம் | | | | | |
| (அ) குறித்து ஒதுக்கப்பட்ட ஒதுக்கம் | | 155,469,021 | | 218,425,416 | |
| (ஆ) வெகுமதி நிதியம் | | 35,076,732 | | 39,212,279 | |
| (இ) ஆராய்ச்சி மானியங்கள் | | 130,546,860 | | 113,818,051 | |
| (ஈ) நீடிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | | 111,155,433 | | 121,836,929 | |
| (உ) பரிசில்களும் நன்கொடைகளும் | | 31,214 | | 31,214 | |
| (ஊ) ஏனையவை | | 11,948,569 | 444,227,828 | 8,687,167 | 502,011,055 |

| | குறிப்பு | 2005 (ரூபா) | | 2006 (ரூபா) | |
|---|---|---|---|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை | | | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | | 184,154,445 | 184,154,445 | 313,582,175 | 313,582,175 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | | | |
| (அ) கொடுக்கப்படவேண்டிய கணக்குகள் | | 18,902,504 | | 28,278,087 | |
| (ஆ) அட்டுறு செலவுகள் | | 17,350,096 | | 32,404,422 | |
| (இ) மீளளிக்கத்தக்க வைப்புக்கள் | | 8,995,460 | 45,248,060 | 10,805,009 | 71,487,518 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | | 1,664,214,755 | | 1,813,896,703 |

நிதியாளரால் தயாரித்து அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

ஆர். பீ. பண்டார.
நிதியாளர்.

ஆலோசனை சபை சார்பாக,

(பேராசிரியர்) ரி. ஹெட்டியாரச்சி,
துணைவேந்தர்.

டபிள்யூ. எச். ஆர். ஹுசேன்,
பதிவாளர்.

## கொழும்புப் பல்கலைக்கழகம்

2006, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு

| | 2005 (ரூபா) | | 2006 (ரூபா) | |
|---|---|---|---|---|
| **வருமானங்கள் :** | | | | |
| 1. ***அரச மானியம் :*** | | | | |
| (அ) மீண்டுவரும் செலவினங்களுக்கான அரச மானியங்கள் | 615,000,000 | | 779,300,000 | |
| (ஆ) மூலதனச் சொத்துக்களை புனரமைக்கவும் பராமரிக்கவும் அரச மானியங்கள் | 27,093,968 | | 43,936,432 | |
| (இ) பரிசில்கள், நன்கொடைகள்-புனரமைப்பு நடைமுறை (கட்டடம்) | | | 835,495 | |
| (ஈ) காலாவதியாகாத திரும்பச் செலுத்தும் மூலதன மானியம் | | | 8,764,627 | |
| (உ) திரும்பச் செலுத்தும் மூலதன மானியம் | | | 20,908,000 | |
| (ஊ) உதவிப் பண மானியம் | 13,412,500 | | 11,664,850 | |
| (எ) மகாபொல புலமைப்பரிசில் மானியம் | | | | |
| (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 8,134,350 | | 21,540,150 | |
| (ii) மகாபொல நம்பிக்கை நிதிய அங்கம் (வருமானம்) | 88,213,350 | | 108,224,300 | |
| (ஏ) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து சம்பள நிலுவைகளுக்கான மானியங்கள் | 8,525,000 | 760,379,168 | - | 995,173,854 |
| 2. பதிவுக் கட்டணங்கள் (பட்டமுன் கற்கை) | 1,160,608 | | 1,785,463 | |
| 3. பதிவுக் கட்டணங்கள் (பட்டப்பின் கற்கை) | 1,045,245 | | 926,500 | |
| 4. கற்கைக் கட்டணம் (பட்டமுன் கற்கை) | 7,675,825 | | 7,916,828 | |
| 5. கற்கைக் கட்டணம் (பட்டப்பின் கற்கை) | 4,197,324 | | 1,674,250 | |
| 6. பரீட்சைக் கட்டணம் (பட்டமுன் கற்கை) | 105,124 | | 164,074 | |
| 7. பரீட்சைக் கட்டணம் (பட்டப்பின் கற்கை) | 899,150 | | 489,800 | |
| 8. வெளிவாரிப் பரீட்சைகள் | 61,105 | | - | |
| 9. கடன்கள் முற்பணங்கள் மீதான வட்டி | 2,229,322 | | 3,016,345 | |
| 10. முதலீடுகள் மீதான வட்டி | 14,409,434 | | 19,512,266 | |
| 11. வெளியீடுகள் விற்பனை | 2,625 | | 2,500 | |

| | 2005 (ரூபா) | | 2006 (ரூபா) | |
|---|---|---|---|---|
| 12. பழைய சரக்குகள்/ஒதுக்கப்பட்டவை விற்பனை | | | 86,695 | |
| 13. சொத்துக்களிலிருந்து வாடகை | 974,214 | | 1,263,926 | |
| 14. மருத்துவக் கட்டணங்கள் | 360,509 | | 306,790 | |
| 15. நூலகத் தண்டப்பணம் | 366,879 | | 599,024 | |
| 16. துணைநிலைச் செயற்பாடுகள் | 696,420 | | 609,575 | |
| 17. பலவித வருமானங்கள் | 4,966,205 | | 24,744,470 | |
| 18. நாணயமாற்று இலாபம் | 136 | | 693,203 | |
| 19. வெளியாட்களுக்குக் கொடுக்கப்பட்ட சேவைகள் | 500 | | 198,200 | |
| வாகன விற்பனை இலாப கணக்கு | 1,019,961 | | - | |
| 20. முறிவுகள் வரவுகள் | 5,173,269 | | 4,713,055 | |
| 21. பரிசில்கள், நன்கொடைகள், வரவுகள் | 812,791 | | 766,829 | |
| 22. நீடிப்பு பாடவிதான வரவுகள் | 67,218,129 | | 77,457,144 | |
| 23. ஆராய்ச்சி மானியங்கள் வரவுகள் | 97,826,450 | | 160,463,706 | |
| 24. புலமைப்பரிசில் வரவுகள் | 205,670 | 211,406,896 | 324,305 | 307,744,946 |
| | | 971,786,064 | | 1,302,918,801 |
| **செலவுகள் :** | | | | |
| **தனிப்பட்ட வருமானங்கள் :** | | | | |
| சம்பளங்கள், கூலிகள் | 297,249,009 | | 380,524,519 | |
| யூபிஎவ்/ஈரிஎவ்/ஓய்வூதியம் | 61,436,120 | | 92,939,562 | |
| தள்ளுபடி | 143,556,838 | | 164,173,424 | |
| மேலதிக/விடுமுறை கொடுப்பனவுகள் | 10,959,598 | | 18,110,504 | |
| பிரயாணம் | 3,097,080 | | 3,012,130 | |
| வழங்கல்கள் | 30,674,854 | | 44,563,094 | |
| சொத்துக்கள் பராமரிப்பு | 9,299,000 | | 13,132,801 | |
| ஒப்பந்த சேவைகள் | 94,593,176 | | 119,027,590 | |
| ஏனையவை | 22,122,317 | | 30,977,599 | |
| (i) மகாபொல புலமைப்பரிசில்/ம. பா. ஆணைக்குழு | 16,351,550 | | 21,517,000 | |
| (ii) மகாபொல நம்பிக்கை நிதிய அங்கம் (செலவினம்) | 78,661,150 | | 106,177,050 | |
| **உதவிப்பணம்** | 16,824,490 | | 11,488,325 | |
| கழிவு | 114,343,514 | | 121,942,588 | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 50,903,601 | | 147,416,726 | |
| நீடிப்புக் கற்கை செலவினம் | 67,218,129 | | 77,457,144 | |
| ஆராய்ச்சி செலவினம் | 97,826,450 | | 160,463,706 | |
| வெகுமதிக் கொடுப்பனவுகள் | 205,670 | | 324,305 | |
| வெகுமதிப் புலமைப்பரிசில்கள் | 30,000 | | 32,250 | |
| கட்டிடம் (நடைமுறை) (புனரமைப்பு) | 27,093,968 | 1,142,446,513 | 44,771,927 | 1,558,052,244 |
| **வரவிலும் மிஞ்சிய செலவு :** | | (170,660,450) | | (255,133,443) |
| வருமானச் செலவுப் பகிர்வுக் கணக்கு | | | | |
| வருமானச் செலவுக் கணக்கிலிருந்து கொண்டுவரப்பட்ட மீதி | | (170,660,450) | | (255,133,443) |
| வருமானச் செலவுக் கணக்கு முன்கொண்டுவரப்பட்ட மீதி | | (1,190,019,640) | | (1,325,176,435) |
| கடந்தகால ஆண்டுகளுக்கான சீராக்கங்கள் | | 35,503,655 | | 1,076,264,420 |
| ஐந்தொகைக்கு கொண்டுசெல்லப்பட்ட மீதி | | (1,325,176,435) | | (504,045,458) |

**கொழும்புப் பல்கலைக்கழகம்**

*நிதிக் கூற்றுக்கள் மீதான குறிப்புக்கள்*

1. **குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் :**

1.1 ***பொது.*** - இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகித்தும் வரலாற்று அடிப்படையிலும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. முன்னைய வருட பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளை மாற்றம் செய்யப்படாதுள்ளது.

1.2 ***சொத்துக்களும் அவற்றின் பெறுமதி மதிப்பீட்டு அடிப்படைகளும் :***

1.2.1 *காணி, கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள்.*- திரண்ட பெறுமானத் தேய்வைக் கழித்து வரும் கிரயத்தில் நிலையான சொத்துக்களின் பெறுமதி காட்டப்பட்டுள்ளது. ஒரு பொருளின் உபயோக காலத்தைப் பொறுத்து அவற்றின் தேய்மானப் பெறுமதியை வருடாந்த அடிப்படையில் அச்சொத்துக்களின் பெறுமதி கழித்துவிடும் முறையில் கணப்பீடு செய்யப்படுகிறது :-

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 5% |
| தளபாடம், அலுவலக உபகரணங்கள் | 10% |
| கற்கை மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் | 20% |
| இணைப்புக்களும் பொருத்திகளும் | 10% |
| நூலகப் புத்தகங்களும் பருவ இதழ்களும் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| பட்டமளிப்பு அங்கிகள் | 20% |
| ஏனையவை | 10% |

கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படவில்லை. அதே நேரம் தள்ளிவிடப்படும் ஆண்டிற்கு முழுவதும் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படுகிறது.

1.2.2 *டி சேரம் விடுதி அழித்தல்.*- டி சேரம் விடுதி பழுதுபார்க்க முடியாத நிலையில் இருந்ததால், பெறுமதியான நிலம் வீணாகக் கூடாது என்ற நோக்கில், மாணவர்களுக்கு கூடுதலான விடுதி வசதி கொடுக்கும் நோக்கில் அந்த வருடத்தில் இடிக்கப்பட்டது. இடிந்த கட்டிடப் பொருட்கள் விற்றதில் ரூபா 4,90,000 பெறப்பட்டது. மானியத் தொகையிலிருந்து சரிப்படுத்த தேய்மானம், கொடுத்து முடிக்கப்படாத மானியம் மூலதனம் ஆகியவற்றைவிட ரூபா 8,764,626.82 நிகர வருமானமாக உள்ளது.

1.2.3 *களஞ்சியசாலை முற்பணம்.*- களஞ்சியசாலை சேமிப்பில் உள்ள பொருட்களுக்கு மதிப்பீடு செய்துவைக்கப்படும். முதலில் வந்து முதலில் சென்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

1.3 ***மூலதன மானியத்திற்கான செலவினம்.- வருடத்திற்கான கிடைத்த மானியம் ரூபா 161.1 மில்லியன் கீழ்க்காணும் முறையில் செலவிடப்பட்டது :-***

| | ரூபா |
|---|---|
| கட்டிடக் கட்டுமானம் | 46,000 |
| புத்தகங்கள் கொள்வனவு | 19,131 |
| ஆராய்ச்சிகூட கற்பித்தல் உபகரணங்கள் | 51,945 |
| தளபாடங்கள் பிற | 43,934 |

இந்த ஆண்டுக் காலப்பகுதியில் பொது திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற மூலதன மானியமானது மூலதனமாக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட சொத்துக்களின் பாவனைக் காலம் முழுவதும் வருமானமாக திருப்பிச் செலுத்தப்பட்டது. ரூபா 1,049,025,092 தொகையானது முந்தைய ஆண்டுகளின் மூலதன மானியத்தின் பொது ஒதுக்கத்திற்கு சரிப்படுத்தப்பட்டதுடன் பல்கலைக்கழகமானது உள்ளகவாரியாக உருவாக்கப்பட்ட நிதியத்தினை கட்டுமாண பணிக்காகவும் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களுக்காகவும் தற்காலிகமாக உபயோகப்படுத்தி வருகின்றது. எனினும் இச்செலவினமானது திறைசேரியினால் ஒப்புவிக்கப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டதாயினும் திறைசேரி திணைக்களத்தினால் இப்பணமானது தரப்படவில்லை.

1.4 ***பணியணியினர் சன்மானங்கள் :***

1.4.1 *பணிக்கொடைக்கான உபகாரக் கொடுப்பனவுகள்.*- எஸ்எல்ஏஎஸ் 16-ஓய்வு சன்மானங்கள் பெறுமதியின் பிரகாரம் எல்லா பணியணியினருக்கும் ஓய்வுபெறும்போது பணிக்கொடைக்கான உபகாரக் கொடுப்பனவுகள் அவர்கள் சேவைக்கு வந்த காலம் தொடக்கம் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் பிரகாரம் ஒரு பணியாளருக்கான பரிப்புக்களானது அவர் தொடர்ந்து 5 வருட சேவையை பூர்த்திசெய்தால் மட்டுமே இருந்தது. இக்கடனானது வெளிவாரியாக நிதியிடப்பட்டோ அன்றி உண்மையான பெறுமதியாகவோ இருக்கவில்லை.

1.4.2 *விவரிக்கப்பட்ட பங்குகொள் திட்டங்கள்.*- பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் பணியணியினர் நம்பிக்கை நிதியத்தின் பங்கானது வருமான கூற்றின் செலவாக மீள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1.4.3 *சட்டத்தின் பிரகாரம் ஏற்பட்ட கொடுப்பனவுகள்.*- நீதிமன்றத்தின் தீர்மானத்தின்படி ரூபா 3,738,079.56 ஆனது ஒரு பணியணியினருக்கு கொடுக்கப்பட்டு தனிப்பட்ட நன்கொடையாக உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. முன்னைய ஆண்டுகளில் இதற்கான கொடுப்பனவுகள் செய்யப்படவில்லை.

1.5 ***நடைமுறைப் பரிப்புகள் :***

1.5.1 *நடைமுறைப் பரிப்புக்கள்.*- நடைமுறைப் பரிப்பானது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள்ளாக அல்லது கோரிக்கையின் நிமித்தம் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

1.5.2 *வரி அறவிடல்.*- பல்கலைக்கழகமானது உள்நாட்டு வருமான வரி அறவிடும் சட்டத்தின்கீழ் வருமான வரி செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளது. எனினும், உள்ளகத்தில் கிடைக்கப்பெற்ற வருமானத்திற்கு பொருளாதார சேவைகள் வரி செலுத்தப்படுவதோடு அது ஏனைய மீண்டுவரும் செலவினத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.6 **வருமான, செலவினங்கள் :**

1.6.1 *வருமானத்தை இனங்காணல் :*

(அ) சேர்வுக் கட்டணங்கள் பெற்றுக்கொண்ட அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ள அதேவேளை வட்டி வருமானம் வரவேண்டிய அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) குறிப்பிட்ட நோக்கத்திற்கான மற்றும் வெகுமதி நிதியங்கள் மீதான வருமானம், ஆராய்ச்சி மானியங்கள் வருமானம், கலந்துரையாடல்கள் மற்றும் வழங்கப்பட்ட ஏனைய சேவைகள் மீதான வருமானம் எஸ்எல்ஏஎஸ் 29 பகுதி 25 இன் பிரகாரம் சேவைகள் முடிவடைந்த வரைக்கும் சேர்க்கப்பட்டுள்ளன. இது பொதுவாக நடப்பு ஆண்டில் ஏற்பட்ட செலவினங்களுக்குச் சமமானவை.

1.7 ***கிடைக்கப்பெற்றவை.***- 31.12.2006 இல் ஒப்பந்தங்களை மீறிய கணக்கில் பணியணியினரிடமிருந்து கிடைக்கப்பெற இருக்கும் தொகையானது ரூபா 36,837,282.09 ஆக இருந்தது.

## கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 2006, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவின் பிரகாரமும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரமுமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 2006, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகளுடனும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(1) மற்றும் 111 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவு மற்றும் பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

1.2 ***கணக்காய்வின் நோக்கெல்லை.***- இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்ற பதவியினர் ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தன. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், முறைகள், நடைமுறைகள் என்பவற்றிற்கமைய மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் ஆதாரப்படுத்தத்தக்க சான்றுகளைப் பரிசீலித்தல், நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலில் மேற்கொண்ட தத்துவங்கள், குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள், தீர்மானங்கள் போன்றவற்றை மதிப்பாய்வு செய்தல், அவற்றின் ஒட்டுமொத்தமான முன்வைத்தலை மதிப்பாய்வு செய்தல், கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றியும் பிரயோகிக்கப்பட்டு போதியளவு வெளிப்படுத்தப்பட்டும் உள்ளதனை நிர்ணயித்தல் என்பவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

2. **நிதிக்கூற்றுக்கள் :**

2.1 ***கணக்காய்வு அபிப்பிராயம்.***- எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களுக்குமான குறிப்புக்களில் (குறிப்பு இலக்கம் 2 இலிருந்து 24 வரை) குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் அமைய கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும்வண்ணம் ஒன்றித்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

2.2 ***நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் :***

2.2.1 *கணக்கீட்டுக் குறைபாடுகள்.*- நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட ரூபா 217,011,158 கூட்டுத்தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இதில் ரூபா 169,255,167 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகள் சீராக்கப்பட்டு மீட்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2007, மே 22 அன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

2.2.2 *இணக்கம் செய்யப்படாத கணக்குகள்.*- 30 பேரேட்டுக் கணக்கு மீதிகளான ரூபா 58,316,686 பரீட்சை மீதியுடன் இணங்கியிராமை பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இவற்றில் ரூபா 57,482,142 ஆன 25 பேரேட்டுக் கணக்கு மீதிகள் இணக்கம் செய்யப்பட்டு திருத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

2.2.3 *பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்.*- பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன :-

(அ) கழக வளாகத்திலும் வைத்திய பீடத்திலும் கணனி, இடர், ஊழியர் மற்றும் வாகனக் கடன் முறையே ரூபா 2,650,849 உம் ரூபா 753,652 உம் அறவிடப்படாதிருந்தது.

(ஆ) பல்வேறு நிறுவகங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்து ஸ்ரீபாளி வளாகத்திற்குப் பெறப்படவேண்டிய ரூபா 326,074 ஒன்பது வருடங்களுக்கு மேலான காலமாக இருப்பதுடன் அம்மீதியை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்லூரி விடுதியின் சில்லறை முற்பணக் கணக்கின் தீர்க்கப்படாத மீதிகளின் தொகை ரூபா 3,351,329 ஆனதுடன் இதில் ரூபா 2,294,239 ஆன தொகை 10 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த முற்பண மீதியாகும்.

(ஈ) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்லூரி விடுதியின் நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகளுக்காகப் பெறப்பட்ட முற்பணத் தொகை ரூபா 16,602,311 ஆனதுடன் இதில் ரூபா 288,473 ஆன தொகை 10 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த மீதியாகக் காணப்பட்டது.

(உ) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்லூரி விடுதியின் தீர்க்கப்படாத நுகர்பொருள் முற்பணங்களின் தொகை ரூபா 146,038 ஆகும். இதில் 16 சதவீதமான ரூபா 24,078 தொகை மூன்று ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த முற்பண மீதியாக இருந்தது.

(ஊ) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் தீர்க்கப்படாத மூலதன முற்பணங்களின் தொகை ரூபா 326,943 ஆகும். இதில் ரூபா 158,456 தொகை 10 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததாகும்.

(எ) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஸ்ரீபாளி வளாகத்தின் பல்வேறு கடன் கொடுத்தோர் மீதி ரூபா 326,766 ஆனதுடன் இதில் 74% ஆன ரூபா 240,227 ஆனது 5 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததாகும்.

(ஏ) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஸ்ரீபாளி வளாகத்தின் தீர்க்கப்படாத மூலதன முற்பண மீதி ரூபா 175,588 ஆகும். இதில் ரூபா 413,067 ஆனது 5 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததானதுடன் 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 316,662 ஆன செலவு மீதி காணப்பட்டது.

(ஐ) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஸ்ரீபாளி வளாகத்தின் தீர்க்கப்படாத பல்வேறு முற்பண மீதி ரூபா 283,068 ஆன அதேவேளை இதில் 14% ஆன ரூபா 38,500 ஆனது 6 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததாகும்.

(ஒ) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்லூரி வளாகத்தின் தீர்க்கப்படாத ஆராய்ச்சி முற்பண மீதி ரூபா 213,730 ஆகும். இதில் 67% ஆன ரூபா 143,730 ஆனது 7 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததாகும்.

(ஓ) ஆராய்ச்சி முகாமைத்துவ பகுதியில் 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்வேறு முற்பண மீதி ரூபா 997,999 ஆன அதேவேளை இதில் ரூபா 106,054 ஒரு ஆண்டிலும் பழமை வாய்ந்ததாகும். மனித உரிமை அபிவிருத்தித் துறையில் அறவிடப்படாத முற்பண மீதியாக ரூபா 344,436 தொகையும் 'ஜயிகா' பிரிவில் அறவிடப்படாதிருந்த முற்பண மீதியாக ரூபா 361,785 உம் காணப்பட்டன.

(ஔ) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொழும்பு பல்கலைக்கழகத்தின் கடன்பட்டோர் மீதி ரூபா 14,657,549 ஆன அதேவேளை இதில் ரூபா 120,182 தொகை 04 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்தவையாகும். 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதியில் ரூபா 3,222,100 ஆன செலவு மீதியும் காணப்பட்டது.

(க) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகக் கல்லூரி வளாகத்தின் சில்லறைக் காசு கட்டு நிதி கணக்கு மீதிகள் ரூபா 390,813 ஆக இருந்ததுடன் அத்தினத்தில் அம்மீதிகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஸ்ரீபாளி வளாகத்தில் ரூபா 342,738 காணப்பட்ட அதே வேளை ரூபா 86,670 தொகை ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்தவையாகும்.

(கி) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகக் கல்லூரி மற்றும் ஸ்ரீபாளி வளாகத்தில் கடன்கொடுநர் மீதி ரூபா 385,948 ஆன அதேவேளை இதில் ரூபா 59,182 ஆன பல்கலைக்கழகக் கல்லூரியின் கடன்கொடுநர் மீதி மூன்று ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்தவையாகக் காணப்பட்டன.

(கீ) ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவப் பிரிவு மற்றும் மனித உரிமை அபிவிருத்திப் பிரிவின் 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத சில்லறைக் காசு மீதி ரூபா 221,233 ஆன அதே வேளை இதில் 54% ஆன ரூபா 119,000 நான்கு ஆண்டுகள் பழைமைவாய்ந்த மீதியாகக் காணப்பட்டது.

(கு) வைத்திய பீடத்தில் 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத சில்லறைக் காசு மீதி ரூபா 66,838 ஆன அதேவளை அத்தினத்தில் உள்ளவாறு மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைத்திய பீடத்தின் தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 488,773 ஆன அதேவேளை இதில் ரூபா 36,788 தொகை ஆண்டிற்கும் மேல் பழைமைவாய்ந்த மீதியாகும்.

(கெ) 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் மூலதன மானிய செயற்திட்டம் 102 (உபகரணங்கள்) கணக்கு மீதி ரூபா 137,722,856 ஆனதுடன் இதில் ரூபா 29,841,932 ஒரு ஆண்டிற்கும் மேல் பழைமை வாய்ந்த மீதியாகும்.

(கே) உடன்படிக்கை மீறலுக்காக பெறப்பட வேண்டிய தொகை :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் 10 ஆம் அத்தியாயத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் உடபடிக்கை மீறப்பட்ட 46 விரிவுரையாளர்களிடம் இருந்து ரூபா 40,241,022 அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டதுடன் இவர்களுள் மூன்று விரிவுரையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,022,262 தொகை சட்ட அறிவுறுத்தல்களில் பதிவளிக்கப்படுவதற்கு தீரமானிக்கப்ட்டிருந்தது.

(ii) இரு விரிவுரையாளர்களிடம் இருந்து ரூபா 6,388,097 அறிவிடப்பட வேண்டியமைக்காக வழக்கு தாக்கல் செய்வதற்கு நீதிபதித் திணைக்களத்திற்கு உரிய ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

(iii) அவ்வாறே 12 விரிவுரையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,533,819 இற்காக வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதிலும் ஐந்து ஆண்டு காலத்திற்கு மேலாக நீதிமன்றத்தில் வழக்குகள் விசாரணை நிலையில் காணப்பட்டது.

(iv) 28 விரிவுரையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,193,932 அவர்களது ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து கழிக்கும் தீர்மானத்தில் 5 ஆண்டளவு காலதாமதமானதை அடுத்தும் அறவிடப்படாதிருந்தது. மேலும் காலம் கடந்திருந்தமையால் அறவிடப்பட வேண்டிய இத்தொகை பெறப்படாது பதிவழிக்கக் கூடிய ஐயப்பாடு நிலவுவது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(v) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனத்திற்காக தாபன விதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.6 ஆம் பந்தியின் பிரகாரம் பிணைப்பணம் செலுத்தக் கடப்பாடுடைய நபர்களுக்கு அவர்களால் செலுத்தப்பட வேண்டிய மொத்த பணத் தொகையும் செலுத்தி முடிப்பது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டதை அடுத்து குறித்த காலப்பகுதியில் பதில் கிடைக்கப்பெறாவிடில் அத் தொகை குறிப்பிட்ட பிணையாளரிடம் இருந்தேனும் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) கற்கை விடுமுறை நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்காக பிணை மாற்றி அமைக்கப்படுவதற்கு விரிவுரையாளர்கள் எவர் தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vii) உடன்படிக்கை மீறப்படுவது தொடர்பாக பெறப்பட வேண்டிய பணத்தொகை தொடர்பாக நிறுவனத்தினால் பேணப்படும் உப பதிவேட்டுடன் பேரேட்டுக் கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டிராததுடன் 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 3,674,461 தொகையான வேறுபாடும் 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 5,304,332 தொகையான வேறுபாடும் கண்டறியப்பட்டது.

2.2.4 **கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை.-** மருத்துவ பீடத்தில் ரூபா 131,645 ஆன முற்பண மீதிக்கான உப பதிவேடு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீரமானங்களுடன் இணங்காமை :**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள் பின்வருமாறாகும் :

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2003, சனவரி 3 ஆம் திகதிய 353 (5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக் கான தாபன விதிக்கோவை XXVI ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் 5 ஆம் பந்திகள் | பயன்படுத்தப்பட முடியாத பொருட்கள் கைதவிர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002, நவெம்பர் 28 ஆம் திகதிய ஐஏ/ஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி உதிரிப்பாகங்களின் கொள்வனவின் போது வழங்குனரால் முழுமையாக பூரணப்படுத்தப்பட வேண்டிய படிவம் பூரணப்படுத் தப்பட்டிராததுடன் இதற்கு இணங்க கணனி உதிரிப்பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரசாங்க நிதிப் பிரமாணம் 110 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் குறித்த பதிவேடு ஒன்று பேணப் பட்டிருக்கவில்லை |
| (ஈ) அரசாங்க நிதிப் பிரமாணம் 373 | ஆய்வு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்கு 2006 ஆம் ஆண்டிலும் இதற்கு முன்னைய ஆண்டுகளின் போதும் கிடைக்கப்பெற்ற எனினும் 2006 திசெம்பர் 31 வரை தீர்க்கப்பட்டிராத சில்லறை காசுக் கட்டுநிதி மீதி ரூபா 134,000 ஆகக் காணப்பட்டது. |

2.2.6 **போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்.-** 1994 யுன் 14 இன் 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகளின்படி இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழித் தேர்ச்சிக்கான சம்பளங்கள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் தொகையாக 2006 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 1,783,937 உம் கல்விசார் படிகள் தவறாகக் கூட்டப்பட்டமையால் பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 9,559,398 மேலதிகமாகப் பங்களிக்கப்பட்டிருந்தது.

மேற்குறித்த சம்பளம் மற்றும் படிப்பணங்களைப் பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கும் அரச சபைகளுக்கும் உரித்தற்றதாக பொது முயற்சிக் பணிப்பாளர் நாயகம் வலியுறுத்தியிருந்தார். மேலதிகமாக, பொதுத் திறைசேரியின் தேசியப் பாதீட்டின் பணிப்பாளர் நாயகம் மெற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தவறானவை எனவும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை அறவிடும்படியும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு அறிவித்திருந்தார். இதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராது தொடர்ந்தும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவதானிக்கப்பட்டது.

3. ***நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு :***

3.1 ***நிதிசார் மீளாய்வு :***

3.1.1 ***நிதி விளைவுகள்.***– *சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி, பல்கலைக்கழத்தின் 2006, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நடவடிக்கைகளின் தொழிற்பாடு, மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வதன் முன்னர் ரூபா 1,078,369 பற்றாக்குறையை விளைவித்தது. இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 812,754,417 ஆகும். ரூபா 823,236,432 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக மீளாய்வாண்டிற்கான மேற்குறித்த பற்றாக்குறை ரூபா 255,133,443 ஆகக் குறைவடைந்திருந்ததுடன் மீண்டெழும் செலவிற்காக முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ரூபா 642,093,968 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 170,660,449 ஆகக் குறைவடைந்திருந்தது.*

3.1.2 ***விசேட நிதியப் பயன்பாடு.***– *பல்கலைக்கழம் 132 குறித்த நிதியங்களைச் செயற்படுத்துவதுடன் 2006 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந் நிதியங்கள் ரூபா 218,425,416 ஆன சாதகமான மீதிகளையும் ரூபா 1,278,276 ஆன பாதகமான மீதிகளையும் கொண்டிருந்தது. கிடைக்கப்பெற்ற மீதிகளிற்கு மேலதிகமாக பல்கலைக்கழத்தால் உறப்பட்ட செலவினம் காரணமாக பாதகமான மீதிகள் ஏற்பட்டிருந்தன. இவற்றில் 35 நிதியங்கள் ஆறு ஆண்டுகளின் போது செயற்பாடற்றுக் காணப்பட்டன.*

3.1.3 ***முற்பண கட்டுப்பாடு***– பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன :–

(அ) *7 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட ரூபா 477,850 கூட்டுத்தொகையான முற்பணத் தொகை உரிய செயற்பாட்டிற்காக செலவிடப்படாத 9 முதல் 95 வரையான காலதாமதத்தை அடுத்து மீள வழங்கப்பட்டிருந்தன.*

(ஆ) செயலமர்வுகள்.– *நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுவதற்காக முற்பணம் உரிய செயற்பாட்டை மேற்கொள்வதற்கு 4 முதல் 23 வரையான காலப்பகுதிக்கு முன்பாக பெறப்பட்டிருந்ததுடன் தெரிவுச் செவ்வையின் போது அவ்வாறாக இருந்த பெறுமதி ரூபா 659,050 ஆகக் காணப்பட்டது.*

(இ) *முற்பணப் பதிவேடு பேணப்படுகையில் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டிய தகவல்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.*

(ஈ) *முற்பணம் தீர்க்கப்பட்டிராத சந்தர்ப்பத்திலும் 7 உத்தியோகத்தர்களுக்கு மென்மேலும் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.*

3.2 ***செயற்பாட்டு மீளாய்வு :***

3.2.1 ***கல்விசார் நடவடிக்கை செயற்பாடு.***– பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன :–

(அ) *2006 ஆம் ஆண்டிற்காக பல்கலைக்கழகத்திற்குச் சேர்க்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 2,034 ஆன அதேவேளை இப் பட்டத்தைப் பெற உள்ள எண்ணிக்கை கலைப் பிரிவின் 668 ஆன அதாவது 33% உம், சட்டப் பிரிவில் 210 ஆன 10% உம், முகாமைத்துவப் பிரிவின் 393 ஆன 19% உம், விஞ்ஞானப் பிரிவில் 482 ஆன 24% உம் மருத்துவ பிரிவில் 220 ஆன 11% உம் ஸ்ரீ பாளி பிரிவிற்கு 61 ஆன 3% உம் ஆகும்.*

(ஆ) *மீளாய்வாண்டின் போது பட்டத்தைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 766 ஆன அதேவேளை இப் பட்டத்தை பெற்றோரில் சட்டப் பிரிவில் 191 பேரும், விஞ்ஞானப் பிரிவில் 290 பேரும், மருத்துவப் பிரிவில் 183 பேரும், ஊடக மற்றும் தொடர்பாடல் துறையில் 102 பேரும் அடங்குகின்றனர். கலை, கல்வி மற்றும் முகாமைத்துவப் பீட மாணவர்கள் எவரும் இவ் ஆண்டின்போது பட்டம்பெற்றுச் சென்றிருக்கவில்லை.*

(இ) *கொழும்பு பல்கலைக்கழகத்தில் 2005 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை கல்வி பிரிவில் 284 பேரும், சட்டப் பிரிவில் 610 பேரும், விஞ்ஞானப் பிரிவில் 1,383 பேரும், கலைப் பிரிவில் 3,081 பேரும், வணிக மற்றும் முகாமைத்துவப் பிரிவில் 1,566 பேரும், மருத்துவப் பிரிவில் 1,413 பேரும், ஸ்ரீ*

பாளி பிரிவில் 226 பேருமாக பீடத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்டிருந்தனர். 2005 ஆம் ஆண்டின்போது உறப்பட்ட மொத்த மாணவர்களின் மீண்டெழும் கிரயம் ரூபா 693,858,072 ஆனதுடன் 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 881,772,788 ஆகும். இதன் படி 2005 ஆம் ஆண்டின் போது ஒரு மாணவனுக்காக ரூபா 79,117 தொகையான மீண்டெழும் கிரயம் உறப்பட்டிருந்ததுடன் 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 102,975 ஆனதுடன் இது 30% அதிகரிப்பு ஆகும். ஒரு மாணவனுக்காக உறப்பட்ட வழமையான மீண்டெழும் கிரயம் பீட ரீதியாக நுண்கலைப் பீடத்தில் ரூபா 75,971 ஐயும், கல்விப் பீடம் ரூபா 127,004 ஐயும் விஞ்ஞான பீடம் ரூபா 144,739 ஐயும் சட்டபீடம் ரூபா 75,035 ஐயும் மருத்துவப் பீடம் ரூபா 163,364 ஐயும், முகாமைத்துவப் பீடம் ரூபா 59,011 ஐயும் ஸ்ரீ பாளிப் பீடம் ரூபா 187,827 ஐயும் சாதாரண கிரயமாகச் செலவிடப்பட்டிருந்தது.

3.2.2 *பட்டப் பின்படிப்புப் பாடநெறிகள் நடாத்தல் :*

(அ) பட்டப் படிப்பு பீடத்தில் பட்டப் பின்படிப்பு பாடநெறிக்காக 2005/2006 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 392 ஆன அதே வேளை பாடநெறிகளிலிருந்தான வருமானம் ரூபா 21,369,541 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 11 பாடநெறிகளுக்காக பரீட்சை மற்றும் ஆய்வு ஒப்படை பரீட்சிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது பட்டங்களைப் பெற்றிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 145 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் போது பட்டப் பின்படிப்பு, டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளை பூர்த்தி செய்திருந்த மாணவர்கனளின் எண்ணிக்கை 215 ஆகக் காணப்பட்ட அதே வேளை இவர்களில் கலைப் பீடத்திற்கு 38 பேரும், கல்விப் பீடத்திற்கு 41 பேரும், முகாமைத்துவ மற்றும் நிதிப் பீடத்திற்கு 21 பேரும், மருத்துவ பீடத்திற்கு 62 பேரும், விஞ்ஞான பீடத்திற்கு 30 பேரும், பட்டப் படிப்பு பீடத்திற்கு 23 பேருமாக இருந்தனர்.

3.2.3 *வளப் பயன்பாடு :*

(அ) 2006, திசெம்பர் 31 இல் உள்ளாறு பல்கலைக்கழகத்தின் நிரந்தர விரிவுரையாளர்கள் 454 ஆகும். இவர்களில் 120 பேர் நுண்கலைப் பீடத்திற்காகவும் 28 பேர் கல்விப் பீடத்திற்காகவும் 28 பேர் சட்ட பீடத்திற்காகவும் 50 பேர் முகாமைத்துவப் பீடத்திற்காகவும் 114 பேர் நிதிப் பீடத்திற்காகவும் 97 பேர் மருத்துவ பீடத்திற்காவும் 17 பேர் ஸ்ரீ பாளிப் பீடத்திற்காவும் ஆகும். இதன் படி ஒவ்வொரு பீடத்திற்காகவும் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் ஒவ்வொரு பீட விரிவுரையாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடப்படுகையில் ஒரு விரிவுரையாளருக்கு நுண்கலைப் பீடத்தில் 25 மாணவர்களும் கல்விப் பீடத்தில் 10 மாணவர்களும் சட்ட பீடத்தில் 21 மாணவர்களும் வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்தில் 31 மாணவர்களும் மருத்துவ பீடத்தில் 12 மாணவர்களும் விஞ்ஞானப் பீடத்தில் 14 மாணவர்களும் ஸ்ரீ பாளிப் பீடத்தில் 12 மாணவர்களும் ஆக இருந்தனர். மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தில் நிரந்தர விரிவுரையாளர் குழுவின் 454 பேரில் 26 % ஆன 118 பேர் வெவ்வேறு காரணங்களுக்காக லீவு பெற்றுச் சென்றிருந்தனர்.

(ஆ) 2006 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழகத்தின் வெளிவாரி விரிவுரையாளர்களுக்கான செலவினம் ரூபா 7,140,999 ஆன அதேவேளை இதில் நுண்கலைப் பீடத்திற்காக 39% உம் கல்விப் பீடம், சட்டப் பீடம் மற்றும் முகாமைத்துவப் பீடத்திற்காக 11% உம் விஞ்ஞானப் பீடத்திற்காக 10% உம் ஸ்ரீ பாளிப் பீடத்திற்காக 36% உம் மருத்துவப் பீடத்திற்காக 4% உமாக பிரிக்கப்பட்டிருந்தது.

3.2.4 *விரிவுரை மணித்தியாலம் :*

(அ) கணக்காய்விற்குப் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், பட்டதாரிகளுக்காக உள்ளக விரிவுரைகன் 42,172 மணித்தியாலங்களும் வெளிவாரி விரிவுரைகள் 3,608 மணித்தியாலங்களும் நடாத்தப்பட்டன. உள்ளக விரிவுரை மணித்தியாலங்கள் விஞ்ஞான பீடத்திற்கு 15,678 உம், வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்திற்கு 4,088 உம், கல்வி பீடத்திற்கு 2,149 உம், மருத்துவ பீடத்திற்கு 2,291 உம், நுண்கலைப் பீடத்திற்கு 17,966 உமாகக் காணப்பட்டது. வெளிவாரி விரிவுரைகள் விஞ்ஞான பீடத்திற்கு 660.5 உம், வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்திற்கு 358.5 உம், கல்வி பீடத்திற்கு 426 உம், மருத்துவ பீடத்திற்கு 32 உம் நுண்கலைப் பீடத்திற்கு 2,131.5 மாகக் காணப்பட்டது. மேலும் பட்டப் பின்படிப்பு பாடநெறிக்காக விரிவுரை மணித்தியாலங்கள் 4,929 மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) பல்கலைக்கழக சுற்றறிக்கை இல. 32 (8) இன் பிரகாரம், பயிலுனர் விரிவுரையாளர் மற்றும் விரிவுரையாளர்கள் ஒரு வாரத்திற்கு ஆகக் குறைந்த அளவில் 12 மணித்தியாலங்கள் பட்டதாரி மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டிய போதிலும் நுண்கலைப் பீடத்தின் 11 விரிவுரையாளர்கள் அவ்வாறு செய்திராமை கண்டறியப்பட்டது. மேற்கொண்டிராத விரிவுரை மணித்தியாலங்கள் 30-170 இற்கு இடையில் காணப்பட்டது.

(இ) பல்கலைக்கழக சுற்றறிக்கை இல. 32 (8) (பீ) இன் பிரகாரம், பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஒரு வாரத்திற்கு ஆகக் குறைந்த அளவில் 8 மணித்தியாலங்கள் விரிவுரைகளில் ஈடுபட வேண்டிய போதிலும் 12 விரிவுரையாளர்கள் அவ்வாறு செய்திருக்கவில்லை. மேற்கொண்டிராத விரிவுரை மணித்தியாலங்கள் 20 - 128 இற்கு இடையில் காணப்பட்டது.

(ஈ) ஏனைய, பீடங்களினால் அவசியமான தகவல்கள் பூரணமாக சமர்ப்பிக்கப்பட்டிராமையால் மேற்கொள்ளப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் தொடர்பாக கணக்காய்வில் அவதானிக்க முடியாதிருந்தது.

3.2.5 *பரீட்சைகள் நடாத்தப்படல்.*- மீளாய்வாண்டின் போது 6 பீடங்களில் முதலாம் பட்டப் பரீட்சைகள் 17 உம், பட்டப்படிப்பு டிப்ளோமா பரீட்சைகள் 20 உம், பட்டப் பின்படிப்பு பரீட்சைகள் 2 உம், ஏனைய டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பரீட்சைகள் 5 உம் நடாத்தப்பட்டிருந்தன. இவற்றில், முதலாம் பட்டப் பரீட்சைகள் 6 இனதும், பட்டப்படிப்பு டிப்ளோமா பரீட்சைகள் 4 இனதும், பட்டப் பின்படிப்பு பரீட்சைகள் 17 இனதும், கலாநிதி பட்டங்களுக்காக 2 இனதும் ஏனைய டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பரீட்சைகள் 1 இனதும் முடிவுகள் வெளியாகி இருந்தன. முடிவுகள் வெளியாகி இராத மொத்த பரீட்சைகளின் எண்ணிக்கை 29 ஆனதுடன் 3 பாடநெறிகளுக்கான பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

3.2.6 *மஹாபொல புலமைப்பரிசில் மற்றும் மாணவர் உதவி மானியம்.*- மீளாய்வாண்டின் போது 5,496 மஹாபொல புலமைப்பரிசில்களுக்காக ரூபா 17,667,300 உம் 692 மாணவர்களுக்கான மாணவர்உதவி மானியமாக ரூபா 9,608,400 உம் வழங்கப்பட்டிருந்தது.

3.2.7 *விடுதி வசதியளித்தல்.*- மீளாய்வாண்டின் போது 12 விடுதிகளில் பதிவு செய்யப்பட்டிருந்த 2,602 மாணவர்களுக்காக ஆண்டின் போது உறப்பட்டிருந்த விடுதிச் செலவினம் ரூபா 42,766,064 ஆன அதேவேளை ஒரு மாணவனுக்காக உறப்பட்டிருந்த விடுதிச் செலவினம் ரூபா 16,436 ஆகும். 2005 ஆம் ஆண்டின் போது இத் தொகை ரூபா 11,790 ஆகக் காணப்பட்டது.

3.3 ***முகாமைத்துவ திறமையீனங்கள் :***

(அ) வணிக மற்றும் முகாமைத்துவ பீடங்களுக்காக 2005 ஆம் ஆண்டின் போது 85 கணனிகளை ஸ்தாபிப்பதற்கு அவசியமான கட்டிடங்கள் மற்றும் மின்விநியோக வசதிகள் போன்ற தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படாது கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக களஞ்சியத்தில் காணப்பட்டன. 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 கணனிகள் பெட்டியில் கட்டப்பட்ட நிலையிலேயே காணப்பட்ட அதே வேளை கணனி வலையமைப்பு தயாரிப்பும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆய்வு முகாமைத்துவப் பிரிவில் பண அறவீட்டுப் பாடநெறி கணக்கிலும் ஆய்வு கணக்கிலும் முறையே ரூபா 3,315,110 உம் ரூபா 146,793 உமாக வருமானத்திற்கும் மேலான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.4 ***வருடாந்த அறிக்கை.***- 2003, 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 ***இனங்காணப்பட்ட இழப்புகள்.***- வணிக மற்றும் முகாமைத்துவ பீடங்களுக்காக 2005 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 477,000 தொகையான கணனித் தொகுதியில் உள்ளடக்கப்பட்ட 6 கணனி மத்திய நிரற்படுத்தல் அலகுகள் காணாமற் போயுள்ளமை அறிவிக்கப்பட்டிருந்தது. ஏற்பட்ட இழப்பு மீளாய்வாண்டின் இறுதியின் போது கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

4. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.**- கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) முற்பணங்கள்
(ஆ) வெளிநாட்டு பயணச் செலவினம்
(இ) பேரேடும் நாட்குறிப்புப் பதிவுகளும் (பட்டப் படிப்புப் பீடம், வைத்திய பீடம், ஸ்ரீ பாளிப் பீடம்)
(ஈ) பணிக்கொடைக் கணிப்பீடு (வைத்திய பீடம்)

பீ. ஏ. பேமதிலக,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

12-650

# அரசாங்க பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப. வ. க.

*(2007 ஆம் ஆண்டின் இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவு செய்யப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : (கடவத்த கிளை)-அத்துகோறலகே ஜயசேன

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2007.08.29 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"மாகொலயைச் சேர்ந்த அத்துகோறலகே ஜயசேன என்பவர் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு பீ. ஏ. எம். ஐ. விஜயவிக்கிரம என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998 ஓகத்து 17 ஆந் திகதிய 157 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2006, மாச்சு 4 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின் மீது நான்கு இலட்சத்து ஐம்பத்து மூவாயிரத்து இருநூற்றைம்பத்தேழு ரூபா எட்டுச் சதம் (ரூ. 4,53,257.08) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 4,53,257.08 பணத்தொகையையும் 2006 மாச்சு 5 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்திரண்டு சதவீதப்படி (32%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 157 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், சியனே கோறளேயின் அதிகாரி பத்துவில் பியகம பிரதேச சபை எல்லைகளினுள் மாக்கொல வடக்கில் அமைந்துள்ள கொடபரகஹவத்த அல்லது மில்லகஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் இல. 25/2, ஹொரலந்த வீதி என்ற வரிதிப்பீட்டிலக்கம் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. சி. கொத்தலாவல என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997.09.10 ஆந் தேதிய 80/97 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு A யின் எல்லைகள்- வடக்கு : ஜே. ஏ. வில்லியம் பெரேராவின் காணி ; கிழக்கு : கி. ச. வீதி ; தெற்கு : 12 அடி அகல வீதி ; மேற்கு : வரைபடம் இல. 1755 இல் துண்டு 2. சொல்லப்பட்ட 80/97 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு றூட் ஆறு தசம் மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 6.33பே.) விஸ்தீரணமுள்ள இது கம்பஹா காணிப் பதிவகத்தில் தொகு/பக்கம் C 455/140 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

12-599

---

## செலான் வங்கி ப. வ. க.

*(2007 ஆம் ஆண்டின் இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவு செய்யப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

(பொலனறுவை-கிளை) - கணக்கு இல. : 0531-01512281-001 மற்றும் 0531-01512281-002

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2007.10.17 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"பொலனறுவையைச் சேர்ந்த கொடகம கமகே பிரேமசிறி என்பவர் "கடனெடுத்தவர்" என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். எம். ரவூப் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, நவெம்பர் 10 ஆந் திகதிய 770 ஆம் இலக்க மற்றும் 2005, ஓகத்து 30 ஆந் தேதிய 980 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2006, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது ஒரு கோடி முப்பத்துமூன்று இலட்சத்து ஆறுபத்தேழாயிரத்து நூற்றறுபத்தாறு ரூபா இருபத்தொன்பது சதம் (ரூ. 1,33,67,166.29) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 1,33,67,166.29 பணத்தொகையையும் 2006 ஒற்றோபர் 1 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்துமூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பன வுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 770 மற்றும் 980 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான முதலாம், இரண்டாம் அட்டவணைகளில் மேலும்

விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### முதலாம் அட்டவணை

வட மத்திய மாகாணம், பொலனறுவை மாவட்டத்தில், தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் மெத பத்துவில் கிராம அலுவலர் பிரிவு 155 அத்துமல்பிட்டியவில் நிஸங்கமல்லபுரவில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்டு அவரின் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டுள்ள FSPP 3950 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 729A எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள், தோப்பு மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : துண்டு 709 ; கிழக்கு : துண்டு 729B (பங்கு) துண்டு 730 ; தெற்கு : துண்டு 730 ; மேற்கு : துண்டு 670. பூச்சியம் தசம் இரண்டு ஒன்று மூன்று ஹெக்டயர் (0.213ஹெக்.) விஸ்தீரணமுள்ள இது பொலனறுவை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் LDO5/33/2/57 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாம் அட்டவணை

வட மத்திய மாகாணம், பொலனறுவை மாவட்டத்தில், தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் மெத பத்துவில் கிராம அலுவலர் பிரிவு 155 அத்துமல்பிட்டியவில் நிஸங்கமல்லபுரவில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்டு அவரின் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டுள்ள FSPP 3950 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 729B (பங்கு) எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள், தோப்பு மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் இதன் எல்லைகள்- வடக்கு : துண்டு 709 ; கிழக்கு : துண்டு 710 ; தெற்கு : துண்டு 730 (வீதி) ; மேற்கு : துண்டு 729A. பூச்சியம் தசம் மூன்று இரண்டு ஐந்து ஹெக்டயர் (0.325 ஹெக்.) விஸ்தீரணமுள்ள இது பொலனறுவை காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் LDO5/33/2/71 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

12-600/ 1

---

### செலான் வங்கி ப. வ. க.

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0720-08002470-001 (வவுனியா கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2007.09.20 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"வவுனியாவைச் சேர்ந்த கந்தசாமி ரவீந்திரதாஸ் என்பவர் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு எம். சிற்றம்பலம் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப் பட்ட 1995 ஒற்றோபர் 9 ஆந் திகதிய 1144, 1996 ஓகத்து 7 ஆந் தேதிய 1813 மற்றும் 1988 ஏப்பிறல் 8 ஆந் தேதிய 3199 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2006, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின் மீது ஒரு கோடி ஐம்பத்தாறு இலட்சத்து இருநூற்றுத்தொண்ணூற்றேழு ரூபா ஒரு சதம் (ரூ. 1,00,56,297.01) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப் பட்ட ரூபா 1,00,56,297.01 பணத்தொகையையும் 2006 ஒற்றோபர் 1 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்துமூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1144, 1813 மற்றும் 3199 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

வட மாகாணம், வவுனியா மாவட்டம், வவுனியா தெற்கு, வவுனியா கிழக்கு மூலை தெற்கில் 0ஏ. 1றூ. 26பே. விஸ்தீரணமுள்ளதும் முல்லைத்தீவு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. ரட்ணசிங்கம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1975.11.05 ஆந் தேதிய 305 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட "பனையடிவளவு பனிச்சையடியில் வளவு மற்றும் பனையடியில் தோட்டம்" என்றழைக்கப்படுவதுமான காணிப்பங்கீடு முழுவதும். இதிலிருந்து : மேலே சொல்லப்பட்ட வரைபடம் இல. 305 இல் துண்டு 2 எனக் காட்டப்பட்ட தென்மேற்காயுள்ள இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுள்ள பிரிக்கப்பட்ட பங்கீடு. இதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : மேலே சொல்லப்பட்ட வரைபடம் இல. 305 இல் துண்டு 1 கணபதிப்பிள்ளை பாலசேகரனுக்குச் சொந்தமானது ; கிழக்கு : கணபதிப்பிள்ளை பாலசேகரத்தின் ஆதனம் ; தெற்கு : மேலே சொல்லப்பட்ட வரைபடம் இல. 305 இல் காட்டப்பட்டவாறு அணுகல் ; மேற்கு : கிதுள் வீதி. இது வவுனியா காணிப்ளபதிவகத்தில் தொகு/பக்கம் C 53/ 168, C53/ 269 மற்றும் C 53/ 270 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

12-600/ 2

**செலான் வங்கி ப. வ. க.**

*(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவு செய்யப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

*கணக்கு இல. : 0880-01146038-101-(திருகோணமலை கிளை)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2007.11.14 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*"திருகோணமலையைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் ஸ்ரீதரன் என்பவர் "கடனெடுத்தவர்" என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு ராமலிங்கம் திருக்குமாரநாதன் என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2003 சனவரி 23 ஆந் திகதிய 1781 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2007, யூன் 30 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின் மீது ஒன்பது இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து முந்நூற்றிருபத்தெட்டு ரூபா அறுபத்திரண்டு சதம் (ரூ. 9,89,328.62) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 9,89,328.62 பணத்தொகையையும் 2007, யூலை 1 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்துமூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1781 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."*

**அட்டவணை**

*கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரசேத செயலாளர் பிரிவில் குச்சவெளி பிரதேச சபை எல்லைகளினுள் நிலாவெளி வட்டார இல் 2 இல் அமைந்துள்ள "பழனித்தரை" என்றழைக்கப்படுவதும் திருகோமணலை உத்தரவு பெற்ற நிலஅளவையாளரும் மட்டம் பார்ப்பவருமான பீ. மகேந்திர நாதன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001.10.10 ஆந் தேதிய 482 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு E எனக் காட்டப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப் பங்கீடும் வளவும். இதன் எல்லைகள் - வடக்கு : மேலே சொல்லப்பட்ட வரைபடம் இல. 482 இல் துண்டு D ; கிழக்கு : மேலே சொல்லப்பட்ட வரைபடம் இல. 482 இல் துண்டு F (வீதிக்கான ஒதுக்கம்) ; தெற்கு : குச்சவெளியிலிருந்து திருகோண மலைக்கான வீதி ; மேற்கு : ரீ. சித்திரவேலுவால் உரிமைகோரப்படும் காணி. முப்பது தசம் ஒன்று சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 30.10பே.) விஸ்தீரணமுள்ள இது திருகோணமலை காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் C 15/154 இன்கீழ் பதிவு செய்யப் பட்டுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*சீ. கொட்டிகல,*
*சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.*

*12-601/1*

---

**செலான் வங்கி ப. வ. க.**

*(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

*கணக்கு இல : 0470-01261235 - 001-மருதானை கிளை*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2007.07.09 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*"கொழும்பு 12 ஐச் சேர்ந்த மொஹமட் யூசுப் மொஹமட் நஸ்ஸர் என்பவர் "கடனெடுத்தவர்" என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டதும், சார்பில் பிரசித்த நொத்தாரிசு எம். ஈ. எஸ். பீரிஸ் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999, பெப்ருவரி 25 ஆந் தேதிய 1545 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2006 திசெம்பர் 31 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது இருபத்தேழு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து இருநூற்றைம்பத்து மூன்று ரூபா இருபத்து மூன்று சதம் (ரூ. 27,42,253.23) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 27,42,253.23 பணத்தொகையும் 2007 ஜனவரி 1 ஆந் தேதி முதல் விற்பனைத் தேதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்துமூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு*

அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1545 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடு வைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுதுமான ஆதனம் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. ஜ. டபிள்யு. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது"

**அட்டவணை**

1. தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் காலியின் நான்கு எல்லைகள் மற்றும் மாநகரசபை எல்லைகளினுள் காலியில் மகாமோதரையில் அமைந்துள்ளதும் தற்போது 266B, கொழும்பு என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் "மகாமோதரையின் ஒரு பகுதி " என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. எச். ஏ. த சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996 ஏப்பிரல் 18 ஆந் தேதிய 1589A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட வரைபடம் இல. 1589A இல் சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகள்- வடக்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1589A இல் துண்டு 6 ; கிழக்கு : வரைபடம் இல. 1355 இல் துண்டு 7 ; தெற்கு : கொழும்பு வீதி மற்றும் வீதி ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1589 A இல் துண்டு 2. சொல்லப்பட்ட 1589A இலக்க வரைபடத்தின்படி ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 6பே) அல்லது (0.0152 ஹெக்டயர்) விஸ்தீரணமுள்ள இது காலி காணிப்பதிவகத்தில் A 533/ 163 ஆம் உரித்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் காலியின் நான்கு எல்லைகள் மற்றும் மாநகரசபை எல்லைகளினுள் காலியில் மகாமோதரையில் அமைந்துள்ளதும் தற்போது 266A, கொழும்பு என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் "மகாமோதரையின் ஒரு பகுதி" என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப் பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. எச். ஏ. த சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996 ஏப்பிரல் 18 ஆந் தேதிய 1589A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட வரைபடம் இல. 1589 A இல் சொல்லப்பட்ட துண்டு 2 இன் எல்லைகள்- வடக்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1589 இல் துண்டு 4 ; கிழக்கு : வரைபடம் இல. 1589A இல் துண்டு 1 ; தெற்கு : கொழும்பு வீதி மற்றும் வீதி; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1589A இல் துண்டு 3. சொல்லப்பட்ட 1589A இலக்க வரைபடத்தின்படி ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 6பே) அல்லது (0.0152 ஹெக்டயர்) விஸ்தீரணமுள்ள இது காலி காணிப்பதிவகத்தில் A 533/ 164 ஆம் உரித்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3. தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் காலியின் நான்கு எல்லைகள் மற்றும் மாநகரசபை எல்லைகளினுள் காலியில் மகாமோதரையில் அமைந்துள்ளதும் தற்போது 266, கொழும்பு என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் "மகாமோதரையின் ஒரு பகுதி" என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. எச். ஏ. த சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, ஏப்பிரல் 18 ஆந் தேதிய 1589A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட வரைபடம் இல. 1589A இல் சொல்லப்பட்ட துண்டு 3 இன் எல்லைகள்- வடக்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல.1589A இல் துண்டு 4 ; கிழக்கு : வரைபடம் இல. 1355 இல் துண்டு 2; தெற்கு : கொழும்பு வீதி மற்றும் வீதி ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1589A இல் துண்டு R1 (வீதி ஒதுக்கம்) சொல்லப்பட்ட 1589A இலக்க வரைபடத்தின்படி ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 6பே) அல்லது (0.0152 ஹெக்டயர்) விஸ்தீரணமுள்ள இது காலி காணிப்பதிவகத்தில் A 533/ 165 ஆம் உரித்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அதனுடன் பின்வருவதின் மேலாகவும் கீழாகவும் ஊடாகவும் வழி உரிமை கொண்டதாக :-

மேலே சொல்லப்பட்ட மகாமோதரையில் அமைந்துள்ள "மகாமோதர வத்தையின்" ஒரு பகுதி என்றழைக்கப்பட்ட காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. எச். ஏ. த சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996 ஏப்பிரல் 18 ஆந் தேதிய 1589A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு R1 (வீதி ஒதுக்கம் 20 அடி அகலம்) எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட காணிப் பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு R1 இன் எல்லைகள்- வடக்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1589A இல் துண்டு R2 வீதி ஒதுக்கம் ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடம் 1589A இல் துண்டுகள் 32, 31, 30, R6 (வீதி ஒதுக்கம்), 28, 27,26, R5 (வீதி ஒதுக்கம்), 22, 21, 20, R4 (வீதி ஒதுக்கம்), 15, 14,13, 12, R3 (வீதி ஒதுக்கம்), 5, 4 மற்றும் 3; தெற்கு : கொழும்பு வீதி மற்றும் ஒதுக்கம் : மேற்கு : வீதி (வரைபடம் இல. 1355 இல் துண்டு 9) சொல்லப்பட்ட 1589A இலக்க வரைபடத்தின்படி இருபத்தேழு தசம் ஐந்து எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 27.58பே) அல்லது (0.0698 ஹெக்டயர்) விஸ்தீரணமுள்ள இது காணி காணிப் பதிவகத்தில் A 437/344 ஆம் உரித்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல.
சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர் - சட்டம்.

12- 601/2

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : 1800001027

கடனாளியின் முழுப்பெயர் : சமரகோன் முதியன்சேலாகே குமாரசிரி சமரகோன்

"குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஹேவாபதிரன என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 3751 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2001.09.25 ஆந் திகதியிடப்பட்ட அடமானபத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் (இதன் பிறகு கூட்டுத்தாபனம் என்று அழைக்கப்படும்) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்குறிப்பிடப்பட்ட கடனாளியினால் மேற்குறிப்பிட்ட அடமானபத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்தத் தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் கீழ் இரண்டு இலட்சத்து முப்பத்தோராயிரத்து அறுபது ரூபா பதினொரு சதம் (ரூ. 2,31,060.11) 2005.10.31 ஆந் திகதிவரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டியிருப்பதால்,

1. குறிப்பிட்ட கடன்தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஆராயிரத்து ஐநூற்று இருபத்தொன்பது ரூபா அறுபத்து மூன்று சதத்தினையும் (ரூ. 1,96,529.63) அதற்கான 2005.05.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக முப்பத்து நான்காயித்து ஐந்நூற்று முப்பது ரூபா நாற்பத்து எட்டு சதத்தினையும் (ரூ. 34,530.48) மொத்தமாக இரண்டு இலட்சத்து முப்பத்தோராயிரத்து அறுபது ரூபா பதினொரு சதம் (ரூ. 2,31,060.11) அறவீடு செய்யவும்.

2. குறிப்பிட்ட ஒரு இலட்சத்து தொண்ணூற்றாராயிரத்து ஐநூற்று இருபத்தொன்பது ரூபா அறுபத்திமூன்று சதம் (ரூ. 1,96,529.63) அறவீடு செய்ய வேண்டிய 13.90% மான வருடாந்த வட்டியினை 2005.11.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்.

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை.

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு) மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு அடகு வைக்கப்படடுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். ஐ. கல்லேல்ல என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது."

### அட்டவணை

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், இஹலவிசி தெகே, கோரளையின், ஹிரியால ஹத்பத்துவவில் கொபல்லவ கிராமத்தில் அமைந்துள்ள போகஹமுலவெலேவத்த என்றழைக்கப்படும் காணிக்கு 2000.10.09 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எச். விஜேதுங்க என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1098 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி காணித்துண்டிலக்கம் 1B இன் எல்லைகளாக- வடக்கே : எச். எம். ஹீன்பண்டா மற்றும் ஏனையோர்களுக்குச் சொந்தமான வயல் நிலமும் ; கிழக்கே : 2 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : கொகரல்லயில் இருந்து கொஸ்வத்த வரையிலான பிரதான பாதையும் ; மேற்கே : காணித்துண்டிலக்கம் 1A யும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு ஒரு றூட் ஒன்பது தசம் இரண்டு பேர்ச்சுகளாகும் (0ஏ. 1றூ. 9.2பே.) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம் மரங்கள் மற்றும் அனைத்துடன் பாதைக்கான உரிமையும் குருநாகலை காணிப்பதிவு அலுவலகத்தில் B 546/282 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

12-615

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : 1900001652

கடனாளியின் முழுப்பெயர் : ரத்னதிலக தூரயலாகே சிரியானி சாந்திலதா

"குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சீ. எம். பி. போகொல்லாகம என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 17619 ஆம் இலக்கத்தைக் கொண்ட 1999.08.10 ஆந் திகதியிடப்பட்ட அடமானபத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் (இதன் பிறகு கூட்டுத்தாபனம் என்று அழைக்கப்படும்) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்குறிப்பிடப்பட்ட கடனாளியினால் மேற்குறிப்பிட்ட

அடமானபத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்தத் தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் கீழ் ஐம்பத்தையாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று நான்கு ரூபா அருபத்தெட்டு சதம் (ரூ. 55,394.68) 2005.05.31 ஆந் திகதிவரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்ப தால்,

1. குறிப்பிட்ட கடன்தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான நாற்பத்து மூவாயிரத்து ஐநூற்று அறுபத்து இரண்டு ரூபா எண்பத்து ஐந்து சதத்தினையும் (ரூ. 43,562.85) அதற்கான 2005.05.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக பதினோராயிரத்து எண்ணூற்று முப்பத்தொரு ரூபா எண்பத்தி மூன்று சதத்தினையும் (ரூ. 11,831.83) மொத்தமாக ஐம்பத்தையாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று நான்கு ரூபா இருபத்தெட்டு சதம் (ரூ. 55,394.68) அறவீடு செய்யவும்.

2. குறிப்பிட்ட நாற்பத்து மூவாயிரத்து ஐநூற்று அறுபத்து இரண்டு ரூபா எண்பத்து ஐந்து சதத்தினையும் (ரூ. 43,562.85) அறவீடு செய்ய வேண்டிய 15.50% மான வருடாந்த வட்டியினை 2005.06.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்.

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை.

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு) மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு அடகு வைக்கப்படடுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. பீ. சி. பெரேரா என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது."

### அட்டவணை

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், தேவமெதிஹறத்பத்துல்வில், வல்கம்பத்து கோரளையில், வாரியபொல பிரதேச சபை எல்லையில் கொஸ்ஸாவ கிராமத்தில் அமைந்தள்ள கொஸ்ஸாவவத்த என்ற காணிக்கு 1998.02.18 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் சரத் வெலகெதர என்பரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 3570A என்ற காணி வரைபடத்தின்படி காணித்துண்டிலக்கம் 30 மற்றும் 31 இன் எல்லைகளாக- வடக்கே : அதே காணி வரைபடத்தின் 32 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கே : அதே காணி வரைபடத்தின் 34 மற்றும் 35 ஆம் இலக்க காணித்துண்டுகளும் ; தெற்கே : அதே காணி வரைபடத்ன் 29 ஆம் இலக்க காணித்துண்டில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையும் ; மேற்கே : 26 ஆம் இலக்க காணித்துண்டில் குறிப்பிடப்பட்ட 18 அடி அகல பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு முப்பது. பேர்ச்சுகளாகும் (0ஏ. 0றூ. 30பே.) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம் மரங்கள் மற்றும் அனைத்துடன் பாதைக்கான உரிமையும் குருநாகலை காணிப்பதிவு அலுவலகத்தில் C 1123/263 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

12-616

---

### மக்கள் வங்கி – ஹிக்கடுவை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2007.10.26 ஆந் திகதி கீழே தரப்பட்டிருக்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப் பட்டதாக இத்தால் அறியத்தருகிறேன் :-

"காலி பிரசித்த நொத்தாரிசு அஜன்தா கபுகமகே என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.11.23 ஆந் திகதி 243 இலக்கம் ஈட்டு முறியின் மீது வறுமதியான கொடுப்பனவில் தங்கல்லை லியனகே சிறியானியும் வல்பிடகமகே கருணாஸிங்க என்பவர்கள் தவணை தவறியுள்ளார் என்பதால் இப்பொழுது ஏழு இலட்சத்து முப்பதாயிரத்து இருநூற்றி தொண்ணூற்றி எட்டு ரூபாவும் முப்பத்தி இரண்டு சதமும் (ரூ. 7,30,298.32) மக்கள் வங்கிக்கு வருமதியாக செலுத்தப்படவேண்டியுள்ளது. 2007.06.27 ஆந் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு 16.75%, ஏழு இலட்சத்து முப்பதாயிரத்து இருநூற்றி தொண்ணூற்று எட்டு ரூபா முப்பத்தி இரண்டு சதமும் (ரூ. 7,30,298.32) மீது ஏலவிற்பனைத் திகதிவரை வட்டியையும் மக்கள் வங்கி சட்டத்தின் 29 எல் பிரிவின் கீழ் அறவிடப்படவேண்டிய பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து 16.75%, ஏழு இலட்சத்து முப்பதாயிரத்து இருநூற்றி தொண்ணூற்றி எட்டு ரூபா முப்பத்தி இரண்டு சதமும் (ரூ. 7,30,298.32) அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதார் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 243 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதத்தின் விவரணம்

தென் மாகாணம், காலி மாவட்டம், வெல்லபட பத்துவையில் தொடரந்துவ பின்கந்தையில் அமைந்துள்ள சுது மெடிய பின்கந்தவத்த அல்லது கங்ஹேவாகே மதெஸ் குடியிறுக்கும் இலக்கம் மூன்றாம் துண்டு வேறுபடுத்தப்பட்ட 3(ஏ) துண்டுக்கு உத்தரவுபெற்ற

நிலஅளவையாளர் டபிள்யு. ஜீ. டி. யூ. கருணாரத்தின என்பவரால் 1999.01.19 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 3502 ஆம் வரைபடத்தின் பிரகாரம் எல்லைகள்- வடக்கு : இலக்கம் 491 ஆம் வரைபடத்தில் குறிப்பிடும் இலக்கம் மூன்றாம் துண்டில் ஒரு பகுதியும் கம்ஸபா வீதியும் ; கிழக்கு : பின்கந்தையில் இருந்து பேரத்துடுவைக்குப் போகும் கம்ஸபா வீதியும் ; தெற்கு: இலக்கம் 491 ஆம் வரைபடத்தின் குறிப்பிடும் இலக்கம் இரண்டும் நாலும் ஆகிய துண்டுகளும் மேற்கு : இலக்கம் 491 ஆம் வரைபடத்தின் குறிப்பீடும் இலக்கம் இரண்டாம் மூன்றாம் துண்டுகளின் ஒரு பகுதியும் எல்லைக்குள் இருக்கும் 15 பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15பே.) அளவுடைய காணியும் அதில் உள்ள கட்டடங்களும், மரம், பயிர்கள் மற்றும் அனைத்தும் ஆகும்.

இக்காணி காலி காணிப்பதிவகத்தில் இலக்கம் C652/240 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமை அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்ஸன் வீதி,
காலி.

12-629

---

### மக்கள் வங்கி- அம்பலாங்கொடை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழான தீர்மானம்

1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்சச் சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி பிரிவின் கீழ் 2005.01.20 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் ஏகமனதாக, பின்வரும் தீர்மானிக்கப்பட்டது.:-

"மல்லியவவடு லோலித பிரசாத் டீ சில்வா மற்றும் மல்லியவடு அன்ரூ நிகொலஸ் சீசல் டீ சில்வா ஆகியோர் கடப்பாடுடையவர்களாகவும் ஈட்டாளர்களாகவும் மக்கள் வங்கி சார்பில் காலி பிரசித்த நொத்தாரிசு எம். ஏ. டீ. எம். பீரிஸ் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 08.06.1999 ஆந் திகதிய 2117 ஆம் இலக்க முறி மீதும் மற்றும் காலி பிரசித்த நொத்தாரிசு சி. லமாஹேவாகே என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 23.03.2004 ஆந் திகதிய 1104 ஆம் இலக்க முறியின் மீதும் வருமதியான கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளமையாலும் மக்கள் வங்கிக்கு ரூபா மூன்று இலட்சத்து எண்பத்து நாலாயிரம் (ரூபா 3,84,000) மற்றும் ரூபா மில்லியன் (ரூபா 3,000,000) தற்போது வருமதியாக உள்ளதாலும் அத்துடன் மக்கள் வங்கி பணிப்பாளர் சபையானது 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29எல் இன் பிரகாரம் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 1104 மற்றும் 2117 ஆம் இலக்க முறிகள் மூலம் மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட மூன்று இலட்சத்து எண்பத்து நாலாயிரம் ரூபா (ரூபா 3,84,000) இற்கு மேலும் வட்டியுடன் ரூபா மூன்று இலட்சத்து எண்பத்து நாலாயிரம் (ரூபா 3,84,000) இற்கு 25.02.2004 ஆந் திகதியிலிருந்து 25% வருடாந்த வட்டியுடனும் மற்றும் ரூபா முப்பது இலட்சம் (ரூபா 3,000,000) மேலும் வட்டியுடன் ரூபா முப்பது இலட்சம் (ரூபா 3,000,000) இற்கு 31.08.2004 ஆந் திகதியிலிருந்து 18.75% வருடாந்த வட்டியும் விற்பனை நாள்வரை அதன் மீதான விளம்பர செலவுகள் மற்றும் ஏதேனும் இருப்பனவுகள் இருந்தால் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக கொழும்பைச் சேர்ந்த உரிமம்பெற்ற ஏல விற்பனையாளரான ஏ. எஸ். லியனகே என்பவரினால் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

#### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மாநகர சபை எல்லைக்குட்பட்ட கொள்ளுப்பிட்டி டீன்ஸ்டோன் பிளேஸில் அமைந்துள்ள இல. 59, டீன்ஸ்டோன் பிளேஸ், உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். எச். பி. ஜோசப் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 12.07.1975 ஆந் திகதிய C/38/75 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு லொட் 18A3Z என அடையாளமிடப்பட்டுள்ள பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு. இதன் எல்லைகள் வடக்கு : லொட் 18A1x மற்றும் 18A2x 26 டீல் பிளேஸ் A தற்போது ஜேம்ஸ் ஏபொல்ட் எனஸ்லி ஜினதாச மற்றும் மேரி ஜெரால்டீன் கெலிஸ்டா பொன்சேக்கா விவாகத்திற்கு முன்னர் ஜினதாசவுக்கு சொந்தமானது ; கிழக்கு : லொட் 18A2x (உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. ஆர். சவுந்தர நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 25.09.1927 ஆந் திகதிய 2242 ஆம் வரைபடத்தின் பிரகாரம் லொட் x10 இன் உபபிரவாக இருந்ததாகும்) தெற்கு : டீன்ஸ்டன் பிளேஸ் மற்றும் ; மேற்கு : வரிமதிப்பீட்டிலக்கம் 24 டீல பிளேஸ் A இன் பரப்பளவு பதினாறு தசம் ஐந்து (0ஏ. 0றூ. 16.5பே.) இது கொழும்பு காணி பதிவகத்தில் 557/294 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
இல. 22, லோவர் டிக்சன் வீதி,
காலி.

12-630

---

### மக்கள் வங்கி- இரத்தினபுரி நகரக் கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம்

பஹல கமராலலாகே உபாலி ஜயரத்ன

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2007.07.27 ஆந் திகதி நடைபெற்ற அதன்

கூட்டத்தில் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"மக்கள் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு டப்ளியூ. டீ. பிரேமச்சந்திர அத்தாட்சிப்படுத்திய 23.04.2004 ஆந் திகதிகொண்ட 2182 ஆம் இலக்க ஈட்டு முறி, பிரசித்த நொத்தாரிசு ஜனத் ஜயவர்த்தன அத்தாட்சிப்படுத்திய 20.04.2005 ஆந் திகதிகொண்ட 1301 ஆம் இலக்க ஈட்டு முறி என்பனமீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது மேற்படி ஈட்டு முறிகளின்மீது முறையே எட்டு இலட்சத்து இருபத்தையாயிரத்து நூறு ரூபாவும் (825,100) ஆறு இலட்சத்து ஐம்பத்துமூவாயிரம் ரூபாவும் (ரூ. 6,53,000) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் மேற்படி எட்டு இலட்சத்து இருபத்தையாயிரத்து நூறு ரூபாவையும் (ரூ. 8,25,100) ஆறு இலட்சத்து ஐம்பத்துரூவாயிரம் ரூபாவையும் (653,0000) முறையே 21.07.2004 ஆந் திகதியிலிருந்து 29.08.2005 ஆந் திகதியிலிருந்தும் விற்பனை திகதிவரை ஆண்டொன்றுக்கு 14.25% சதவீதப்படி மேலும் வட்டியையும் ஏனைய செலவுகளையும் மேற்படி மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ஊ (29 L) என்னும் பிரிவின்கீழ் அறவிடப் படற்பாலதான பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 2182 ஆம் 1301 ஆம் இலக்க ஈட்டு முறிகளின்மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஏ. எஸ். லியனகே என்பவரால் பகிரங்க ஏலத்தல் விற்பனை செய்யப்படவேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப் பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குறுவிட்ட கோறளை, உடபற்று தெற்கு குறுவிட்ட பிரதேச பை எல்லைகளுக் குட்பட்ட தம்பிலியான என்னும் இடத்தில் அமைந்துள்ளதும் புஹுலவலவத்த அல்லது புஹுலகனத்த அல்லது டிஸ்பென்சறி வத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். வர்ணசூரிய தயாரித்த 17. 06. 1999 ஆந் திகதிகொண்ட 138 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 1, 2, 3 என அடையாளமிடப்பட்ட அடுத்தடுத்துள்ள பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள அனைத்தையும் சேர்த்து. இதற்கு எல்லைகளாக- வடக்கில் : டிஸ்பென்சறி வத்த உடஹா கெபெல்ல ; கிழக்கில் : கொழும்பு இரத்தினபுரி பெருந் தெரு ; தெற்கில் : அகழி ; மேற்கில் : தொம்பகஹா எல என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு இருபத்துநாலு தசம் மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 24.3பே)

இக்காணி இரத்தினபுரி மாவட்டக் காணிப் பதிவகத்தில் ஏ 593/298 என்பதன்கிழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
இரத்தினபுரி

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமையலுவலகம்,
புதிய நகர்,
இரத்தினபுரி.

12-632

**வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 1003 5043 7651 - T. A. B. ஜீவந்தி மற்றும் P. P. பியதிலக .

2007, ஏப்பிறல் 26 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது -

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, பிட்டகோட்டே குருந்துவத்த ரோட் இல. 62/1 இல் வசிக்கும் தனிப்புலி ஆரச்சிகே பியன்காஜீவந்தி மற்றும் பளகெட்டி பிட்டியகே பியதிலக்க கடப்பாடுடையவராக வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்திபெற்ற நொத்தாரிசு டி. கே. கே. கமலத் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2004, நவெம்பர் 05 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 553 மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் 2007, பெப்புருவரி 20 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிமூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு இலங்கையில் சட்ட ரீதியாக நாணயம் பதினொரு இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து முந்நூற்றுப் பதினொரு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ.11,43,316.65) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாக உள்ளதாலும், 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் விசேட ஏற்பாடுகள் சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின்கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர் சபையானது சொல்லப்பட்ட இலங்கையில் பாவனையிலுள்ள நாணயத்திலான முழுத் தொகையான பதினொரு இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்து முந்நூற்றிப் பதினொரு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 11,43,316.65) ஐ 2007 பெப்புருவரி 21 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை பதினாறு இலட்சத்து தொழாயிரத்து நாற்பத்திரெண்டு ரூபா எண்பத்தி மூன்று சதம் (ரூ. 11,00, 942.83) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பன்னிரெண்டு தசம் ஐந்து (12.5%) சதவீதம் வட்டியுடன் கூறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இல. 553 கொண்ட சொல்லப்பட்ட முறிமூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதார் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்ட வேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது".

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபை எல்லையினுள் கராதொட்ட கிராமத்தில் அமைந்த மெதவத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எல். என். பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 2004 சனவரி 20 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 2469 இல் குறிப்பிடப்பட்டு பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட துண்டு 2சி2 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள். கட்டிடங்கள் மற்றும் சகலதுடன், மேலும் இந்தக் காணிக்குரிய வழி உரிமைகள் மற்றும் சலுகைகள் சகலதுடன், மேற்கூறப்பட்ட துண்டு 2சி2 காணியின் எல்லைகளாவன- வடக்கில் : நிலஅளவையாளர் வரைபடம் இல. 2395 இல் துண்டு 1 ; கிழக்கு : துண்டு 2சி 5 ; தெற்கில்: நிலஅளவை வரைபடம்இல. 459 இல் துண்டு 2டி2 நிலஅளவை வரைபடம் இல. 3429 இல் துண்டு 2ஈ மற்றும் அளவை வரைபடம்

இல. 2469 இல் துண்டு 2சி3 (ஆயினும் நிலஅளவை வரைபடம் இல. 3429 அஇல் 2ஊ3 மற்றும் 2 ஈ எனவும் நிலஅளவை வரைபடம் இல. 459 இல் துண்டு 2டி2 எனப் பதிவாகியவை) மேற்கில் : நிலஅளவை வரைபடம் இல் 2429 இல் துண்டு 2சி3 மற்றும் 2சி4 என்பனவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 2469இற்கமைய இந்தக் காணி பதின்நான்கு பேர்ச்சஸ் (0ஏ.0றூ. 14பே.) விஸ்தீரணமுடைய இந்த காணி ஹோமாகம காணி பதிவகத்தில் தொகுதி பக்கம் ஜி. 1029/273 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1. ஹோமாகம காணி பதிவகத்தில் தொகுதி பக்கம் ஜி 1029/274 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 2469 இல் துண்டு 2 சி 3 (12 அடி அகலமான வழி ஒதுக்கீடு).

2. ஹோமாகம காணி பதிவகத்தில் தொகுதி பக்கம் ஜி 1029/272 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. பி. டயஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1998 மே 3 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 459 இல் விவரிக்கப்பட்ட துண்டு 2டி2 (12 அடி அகலமான வீதி) .

3. ஹோமாகம காணி பதிவத்தில் தொகுதி பக்கம் ஜி 1029/7 இல் பதிவாகியுள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. எஸ். எஸ். குருப்பு அவர்களால் தயாரிக்கப்பட்ட 1995 திசெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 3429 இல் விரிக்கப்பட்ட துண்டு 2ஈ (12 அடி அகலமான வழி).

மேற்கூறப்பட்ட காணித்துண்டுகளின் மேலாகவும் ஊடாகவும் வழி உரிமையுடன்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

12-625/3

---

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0001 1006 1137 - கிறிஸ் அப்பரல்ஸ்.

2004, சனவரி 09 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது -

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, இல. 170/1 மல்வத்த வீதி, பஹல பியன்வில, மஹர, கடவத்தை என்னும் முகவரியில் "கிறிஸ் அப்பரல்ஸ்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் பங்காண்மை வியாபாரம் நடத்தும் மேற்படி குடியரசில் 170/1, மல்வத்த வீதி, பஹல பியன்வில, மஹர, கடவத்தை என்னும் முகவரியைச் சேர்ந்த முனுகொட ஹேவகே கருணாசேன, ரீட்டா முனசிங்க இருவரும் கடனெடுத்தவர்கள் என்ற வகையிலும் முனுகொட ஹேவகே கருணாசேன என்பவர் ஈடுவைத்தவர் என்ற வகையிலும் மேற்படி வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். வீ. ஈ. விஜேரத்ன அத்தாட்சிப்படுத்திய 1999 பெப்புருவரி 25 ஆந் திகதி கொண்ட 2024 ஆம் இலக்க ஈட்டுமுறி, 2000 பெப்புருவரி 18 ஆந் திகதி கொண்ட 2242 ஆம் இலக்க ஈட்டு முறி, 2003 மே 19 ஆந் திகதி கொண்ட 2535 ஆம் இலக்க ஈட்டுமுறி, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ.எம்.கே.ஏ. குணதிலக அத்தாட்சிப்படுத்திய 1997 ஒகத்து 15 ஆந் திகதிகொண்ட 1760 ஆம் இலக்க ஈட்டுமுறி, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். வீ. ஈ. விஜேரத்ன அத்தாட்சிப்படுத்திய 2000 சனவரி 10 ஆந் திகதி கொண்ட 2327 ஆம் இலக்க ஈட்டுமுறி, 2003 மே 19 ஆந் திகதி கொண்ட 2536 ஆம் இலக்க ஈட்டுமுறி என்பன மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால் 2003 யூன் 16 ஆந் திகதியன்று உள்ளவாறு மேற்படி முறிகளின் மீது நிலுவையிலிருக்கும் இலங்கையின் சட்டப்பூர்வமான பணமாகிய ஏழுபத்திநாலு இலட்சத்து இருபத்திநாலாயிரத்து ஐந்நூற்றி முப்பத்திரண்டு ரூபா அறுபத்து நாலு சதம் (ரூபா 74, 24,532.64) இப்பொழுது வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் ஏழுபத்திநாலு இலட்சத்து இருபத்து நாலாயிரத்து ஐந்நூற்றி முப்பத்திரண்டு ரூபா அறுபத்து நாலு சத்தையும் (ரூபா. 74,24,532.64) ஐம்பத்தொரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா மீது (ரூபா 51, 20,000) 2003 யூன் 17 ஆந் திகதி முதல் விற்பனை திகதிவரை ஆண்டொன்றுக்குஇருபது சதவீதப்படி (20%) வட்டியையும் மேலும் பத்து இலட்சத்து எழுபதாயிரம் ரூபா மீது (ரூபா 10,70,000) ஆண்டொன்றுக்கு பன்னிரண்டு சதவீதப்படி வட்டியையும் (12%) மேலும் மூன்று இலட்சத்து நாலாயிரத்து எழுநூற்றித் தொண்ணூற்றாறு ரூபா பதினாறு சதத்தின்மீது (ரூபா 30,47,96.16) ஆண்டொன்றுக்கு பதினெட்டு சதவீதப்படி வட்டியையும் (18%) விளம்பரச் செலவுகளையும் வேறு அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படுபவையும் மேற்படி 2024, 2042, 2505, 1760, 2327, 2736, கொண்ட ஈட்டுமுறிகளின் மீது மேற்படி வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டவையுமான ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதார் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவீடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தால் உரிததாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது",

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், பியகம பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட சியனே கோறளை, அதிகாரி பற்று பஹால பியன்வெல கிராமத்தில் மல்வத்த வீதி வழியாக அமைந்துள்ளதும் 13/5 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதுமான மில்லகஹாவத்த என அழைக்கப்படும் காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. ஏ. கட்டுகம்பளை தயாரித்த 1995 நவெம்பர் 06 ஆந் திகதிகொண்ட 105/1995 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு ஏ எனஅடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு ஏ என்பதற்கு எல்லைகளாவன - வடக்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. எவ். ஜே. பெரேரா தயாரித்த 1985 யூன் 26 ஆந் திகதி கொண்ட 9343 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 1 இன் எஞ்சிய பகுதி ; கிழக்கு : மேற்படி 9343 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 2 (பாதை) ; தெற்கில் : துண்டு பீ ; மேற்கில் : துண்டு 7 இன் எஞ்சிய பகுதி என்பன அமைந்துள்ளன. மேற்படி 105/1995 ஆம் இலக்க

வரைபடத்தின் படி இதன்பரப்பளவு இரண்டு தசம் நாலு மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ 2.43பே.) இது கம்பஹா காணிப்பதிவத்தில் தொகுதி /பக்கம் சீ 609/ 186 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பஹால பியன்வெல கிராமத்தில் மல்வத்த வீதி வழியாக அமைந்துள்ளதும் 13/5 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதுமான மில்லகஹாவத்த என அழைக்கப்படும் காணியின் மேற்படி 105/1995 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு பீ என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு பீ என்பதற்கு எல்லைகளாக வடக்கில் துண்டு ஏ ; கிழக்கில் : மேற்படி 9343 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 2 (12 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்டது) ; தெற்கில் : 9343 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 3 மற்றும் துண்டு சீ ; மேற்கில் : துண்டு எவ் என்பன அமைந்துள்ளன. மேற்படி 105/1995 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒன்பது தசம் மூன்று சைவர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ, 9.30பே.) இது கம்பஹா காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் சீ 500/ 269 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பஹால பியன்வெல கிராமத்தில் மல்வத்த வீதி வழியாக அமைந்துள்ளதும் 13/5 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம கொண்டதுமான மில்லகஹாவத்த என அழைக்கப்படும் காணியின் மேற்படி 105/1995 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு சீ என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும்சேர்த்து, மேற்படி துண்டு சீ என்பதற்கு எல்லைகளாக- வடக்கில் : துண்டு பீ ; கிழக்கில் : மேற்படி 9343 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 3 ; தெற்கில் : வீதி ; மேற்கில் : துண்டுகள் டீ. ஈ என்பன அமைந்துள்ளன மேற்படி 105/ 1995 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு எட்டு தசம்இரண்டு ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 8.27பே.). இது கம்பஹா காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் சீ 500/ 282 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி 105/ 1995 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் வீதிக்கென ஒதுக்கப்பட்ட காணியின் மீதான வழியுரிமையுடன் சேர்த்து.

### இரண்டாம் அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், பியகம பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட சியனே கோறளை, அதிகாரி பற்று பஹால பியன்வெல கிராமத்தில் மல்வத்த வீதி வழியாக அமைந்துள்ளதும் 13/6 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதுமான மில்லகஹாவத்த என அழைக்கப்படும் காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. எவ். பெரேரா தயாரித்த 1985, யூன் 26 ஆந் திகதி கொண்ட 9343 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 3 என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : துண்டு 6 ; கிழக்கில் : துண்டு 2 மற்றும் வண்டிப்பாதை ; தெற்கில் : வண்டிப்பாதை ; மேற்கில் : துண்டு 4 என்பன அமைந்துள்ளன. மேற்படி 9343 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பத்து தசம் மூன்று ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10.39பே.) இது கம்பஹா காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் சீ. 560/ 232 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

12-625/ 4

---

### வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 0023 1600 2028-யூ. எல். ஐ. எஸ். கே. விஜேசேன.

2007, ஒகத்து 30 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது-

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, தும்மலசூரிய, பாளுகமுவ, பிரதான வீதியில் "மோனாலீஸா" வீட்டில் வசிக்கும் உபாசக லேகம்லகே இந்து சமன் குமார விஜேசேன கடப்பாடுடையவராக வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். அலகேந்திரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, யூலை 25 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1590 மற்றும் 1592 மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் 2007, யூன் 06 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிமூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு இலங்கையில் சட்ட ரீதியாகப் பாவனையிலுள்ள நாணயம் முப்பத்தொரு இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்து இருநூற்றி ஐந்து ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 31,75,205.89) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாலும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையானது சொல்லப்பட்ட இலங்கையில் பாவனையிலுள்ள நாணயத்திலான முழுத்தொகையான முப்பத்தொரு இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்து இருநூற்றி ஐந்து ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 31,75,205.89) ஐ 2007, யூன் 07 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை இருபத்தொன்பது இலட்சத்து இருபத்தொறாயிரத்து தொழாயிரத்து எண்பத்தாறு ரூபா நாற்பத்திரெண்டு சதம் (ரூ. 29,21,986.42) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதின்நான்கு (14%) சதவீத வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இல. 1590 மற்றும் இல. 1592 ஐக் கொண்ட சொல்லப்பட்ட முறிமூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட் டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது ".

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கோறளை தெற்கின் கட்டுகம்பொல ஹத்பத்துவில் உடுபத்தாவ பிரதேச சபை எல்லையினுள் பாளுகமுவில் அமைந்த "அகரவத்த" என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஜி. எஸ். சமரதுங்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 2002, நவெம்பர் 13 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 4952பி இல் குறிப்பிடப்பட்டு பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட துண்டு 1 என

அடையாளமிடப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுடன், மேலும் வழி உரிமைகள் மற்றும் சலுகைகள் சகலதுடன், மேற்கூறப்பட்ட துண்டு 1 காணியின் எல்லைகளாவன- வடக்கில் : இந்த காணியின் மிகுதிப் பாகம் ; கிழக்கில் : நிலஅளவை வரைபடம் இல. 4980 இல் துண்டு 1 மற்றும் ; தெற்கில் : மாதம்பே உடுபத்தாவ பிரதான வீதி மற்றும் மேற்கில் : இந்தக் காணியின் மிகுதிப் பாகம் என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 4952பி இற்கமைய இந்தக்காணி இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றா. 20பே.) விஸ்தீரணமுடையது. இந்த காணி குளியாப்பிட்டி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் கே 206/66 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு க. அலகேந்திரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, யூலை 26 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1590 இன்கீழ் ஈடு செய்யப்பட்ட காணி.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கினியாம கோரளையின் கட்டுகம்பொல ஹத்பத்துவில் பிங்கிரிய பிரதேச சபை எல்லையினுள் முறுகண்டிய வில் அமைந்த திம்பிரிகஹவத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் வேர்ணண் பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 2002 சனவரி 5 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 8126 இல் குறிப்பிடப்பட்டு பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட துண்டு என அடையாளமிடப்பட்ட முழுக் காணித்துண்டு அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுடன் மேலும் இந்தக் காணிக்குரிய வழி உரிமைகள் மற்றும் சலுகைகள் சகலதுடன் மேற்கூறப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன- வடக்கில் : சிலாபம் குருநாகல் பிரதான வீதி ; கிழக்கில் : நிலஅளவை வரைபடம் இல. 8126 இல் துண்டு 2 ; தெற்கில் : இந்தக் காணியின் மிகுதிப் பாகம் ; மற்றும் மேற்கில் : இந்தக் காணியின் மிகுதிப் பாகம் என்பவையாகும்.

மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 8126 இற்கமைய இந்தக்காணி ஏழு தசம் ஒன்று ஒன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றா, 7.11பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி குளியாப்பிட்டி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் இல. எம். 126/294 பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட முறுகண்டியில் அமைந்த திம்பிகிரிகஹவத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து நிலஅளவை வரைபடம் இல. 8126 இல் குறிப்பிடப்பட்டு பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட துண்டு 2 என அடையாளமிடப்பட்ட முழுக் காணித்துண்டு அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுடன் மேற்கூறப்பட்ட துண்டு 2 இன் எல்லைகளாவன- வடக்கில் : சிலாபம் குருநாகல் பிரதான வீதி ; கிழக்கில் : நிலஅளவை வரைபடம் இல. 8082 இல் துண்டு 3 ; தெற்கில் : இந்தக் காணியின் மிகுதிப் பாகம் ; மற்றும் மேற்கில் : நிலஅளவை வரைபடம் இல. 8126 இற்கமைய இந்தக் காணி ஐந்து தசம் எட்டு ஒன்பது (0ஏ. 0றா. 5.89பே.) பேர்ச்சஸ் விஸ்தீரண முடையது. இந்த காணி குளியாப்பிட்டி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஆ 126/293 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த பிரசித்திபெற்ற நொத்தாரிசு ஆர். அலகேந்திரா அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006 யூலை 25 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1592 இன்கீழ் ஈடுசெய்யப்பட்ட காணித்துண்டு.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

12-625/5

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 0042 5000 9718 - வீ. கணேஷன்

2007, ஏப்பிறல் 26 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது -

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, கொழும்பு11, சேகர் வீதி, இல. 180/3/15சி இல் வசிக்கும் வீரப்பன் கணேஷன் கடப்பாடுடையவராக வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற நொத்தாரிசு டி. கே. கே. கமலத் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2004, நவெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 565 மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்தநொத்தாரிசு என். எஸ். கலங்சூரிய அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, மாச்சு 22 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 139 மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் 2007, மாச்சு 08 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு இலங்கையில் சட்ட ரீதியாகப் பாவனையிலுள்ள நாணயம் ஐம்பத்து மூன்று இலட்சத்து எண்பத்தொறாயிரத்து எண்ணூற்றி முப்பத்திரெண்டு ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூ. 53,81,832.55) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவு முள்ளதாலும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப் பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையானது சொல்லப்பட்ட இலங்கையில் பாவனையிலுள்ள நாணயத்திலான முழுத்தொகை யான ஐம்பத்து மூன்று இலட்சத்து எண்பத்தோராயிரத்து எண்ணூற்றி முப்பத்திரெண்டு ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூ. 53,81, 832.55) ஐ 2007, மாச்சு 09 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை முப்பத்தொரு இலட்சத்து முப்பத்தி மூவாயிரத்து எண்பத்திநான்கு ரூபா நாற்பத்தி மூன்று சதம் (ரூ. 31,33,084.43) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதின்மூன்று (13%) சதவீத வட்டியுடன் மேலும் பத்தொன்பது இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து எழுநூற்றி தொண்ணூற்றிரண்டு ரூபா இரண்டு சதம் (ரூ. 19,89,782.02) கொண்ட பதின்நான்கு (14%) சத வீத வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து ஆறவிடுவதற்காக இல. 565 மற்றும் 139 கொண்ட சொல்லப்பட்ட முறிகள் இல. மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட் டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் டன்ஸ்டன் கெலார்ட் அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்கூறு கோரளையின் ராகம் பத்துவில் வத்தளை மாபோல நகர சபை நிர்வாக எல்லையினுள் அமைந்த கோக்கியஹேன என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. ரத்நாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 2004, மாச்சு 10 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 2119ஏ இல் குறிப்பிடப்பட்டு பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட துண்டு 1 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு

முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதுடன், மேலும் இந்தக் காணிக்குரிய வழி உரிமைகள் மற்றும் சலுகைகள் சகலதுடன், மேற்கூறப்பட்ட துண்டு 1 காணியின் எல்லைகளாவன – வடக்கு : துண்டு 2 (தெருவுக்கான ஒதுக்கு) ; கிழக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஜே. நாணயக்கார அவர்களால் தயாரிக்கப்பட்ட நில அளவை வரைபட இல. 1463 இல் இருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ஏ. குணசோம ரத்நாயக்க அவர்களால் எடுக்கப்பட்ட உண்மையான பிரதியில் துண்டு 6 B எனக் குறிக்கப்பட்ட காணி ; தெற்கு : காண் வெட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட காணித்துண்டு ; மற்றும் மேற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. எல் பீரிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1967 திசெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 1855 இல் துண்டு யு 1 என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 2119ஏ இற்கமைய இக்காணி ஏழு தசம் ஏழு பூஜ்யம் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 7.70பே.) விஸ்தீரணமுடையது. இந்த காணி கொழும்பு காணி பதிவகத்தில் தொகுதி பக்கம் B 926/142 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1. கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி பக்கம் டீ 926/143 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 2119ஏ இல் துண்டு 2 .

2. கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி பக்கம் B 926/27 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. எல். பீரிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1967, திசெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட மேலும் 1968, திசெம்பர் 17 ஆந் திகதி திருத்தியமைக்கப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 1855 இல் துண்டு B2.

3. கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி பக்கம் B 888/209 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நிலஅளவை வரைபடம் இல. 1855 இல் துண்டு ஏ3 எனும் காணித்துண்டுகள் ஊடாகவும் மேலாகவும் வழி உரிமையுடன்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

12-625/6

---

### வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 0038 1000 0776-மாஷா அரிசி ஆலை

2007, ஓகத்து 30 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது–

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, கதுருவெல, முஸ்லிம் கொலனியில் இல. 59 இல் “மாஷா அரிசி ஆலை” எனும் பெயரின் மற்றும் மகுடத்தின்கீழ் பங்குடைமையில் தொழில் நடத்தும் மேற்கூறப்பட்ட குடியரசில் அக்குரண, புளுகஹதென்ன, இல. 62/1, இல் வசிக்கும் அப்துல் ஹமீட் கயிரூன் நிஸி பீபி மற்றும் அதே குடியரசின் ஹந்தெஸ்ஸ, தவுளகள, இல. 215/A இல் வசிக்கும் அப்துல் அஸீஸ் முகமது சலீம் கடப்பாடுடையவர்களாக மேலும் மேற்கூறப்பட்ட குடியரசின் அக்குரண, புளுகஹதென்ன, இல. 62/1 இல் வசிக்கும் அப்துல் ஹமீட் கயிரூன் நிஸி பீபி ஈடு செய்தவராகவும் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்திபெற்ற நொத்தாரிசு K. S. P. W. ஜயவீர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, ஒற்றோபர் 16 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 4077 மீது வர வேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் 2007, மே 31 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு இலங்கையில் சட்ட ரீதியாகப் பாவனையிலுள்ள நாணயத்தில் நாற்பத்திரெண்டு இலட்சத்து ஐயாயிரத்து நூற்றி அறுபத்தொரு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 42,05,161.65) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பளர்கள் சபையானது சொல்லப்பட்ட இலங்கையில் பாவனையிலுள்ள நாணயத்திலான நாற்பத்திரெண்டு இலட்சத்து ஐயாயிரத்து நூற்றி அறுபத்தொரு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ.42,05, 161.65) ஐ 2007 யூன் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை முப்பத்தொன்பது இலட்சம் ரூபா (ரூ. 39,00,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினேழு (17%) சதவீத வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இலக்கம் 4077 ஐக் கொண்ட சொல்லப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.”

#### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், மெதபலாத உடுநுவர இல் உடுநுவர பிரதேச சபை எல்லையினுள் கெலிஓய வீதியில் வரிமதிப்பீடு இல. 11 ஐக் கொண்ட தவுளகள கிராமத்தில் அமைந்துள்ள “லியனகஸ்தென்ன வத்த” என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் M. ராஜசேகரன் அவர்களால் தயாரிக்கப்பட்டு 2006, யூன் 22 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 6715 இல் விபரிக்கப்பட்டதும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதுடன் மேலும் சகல வழி உரிமைகள் மற்றும் சலுகைகள் சகலதுடன். மேற்கூறப்பட்ட காணியின் எல்லைகளாவன– வடக்கில் : H. M. A. பரீடுக்குச் சொந்தமான காணி ; கிழக்கில் : A. H. ஜெயினுதீனுக்குச் சொந்தமான வயல் நிலம் ; தெற்கில் : தற்போது முஸம்மில் உரிமைகோரும் அப்துல் காதருக்குச் சொந்தமான காணி ; மற்றும் மேற்கில் : கெலிஓயவிலிருந்து கண்டிக்குச் செல்லும் வீதி என்பவையாகும். நில அளவை வரைபடம் இல. 6715 இற்கமைய இந்தக் காணி முப்பத்து நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 34பே) விஸ்தீரணமுடையது.

மேற்கூறப்பட்ட காணி கீழ் விபரிக்கப்பட்ட காணியின் மீள் நில அளவையாகும் :-

மேற்கூறப்பட்ட தவுளகள கிராமத்தில் அமைந்துள்ள "லியனகஸ் தென்ன வத்த" என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் H. D. G. K. G. ரொட்ரீகோ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1975, சனவரி 25 ஆந் திகதியிடப்பட்டதும் 1975, பெப்புருவரி 15 ஆந் திகதியிடப்பட்டதுமான நில அளவை வரைபடம் இல. 785 இல் துண்டு 4 என விபரிக்கப்பட்டதும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதுடன். மேற்கூறப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கில் மற்றும் வடகிழக்கில் : மேற்கூறப்பட்ட நில அளவை வரைபடம் இல. 785 இல் துண்டு 3 ; தென் கிழக்கில் : A. H. ஜெயினுதீனுக்குச் சொந்தமான வயல் நிலம் ; தெற்கில் : அப்துல் காதருக்குச் சொந்தமான காணி ; மற்றும் மேற்கில் : வீதி என்பவையாகும். நில அளவை வரைபடம் இல. 785 இற்கமைய இந்தக் காணி முப்பத்து நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 34பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கண்டி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் C 397/ 42 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

12-625/7